பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 04 சனிக்கிழமை 18.06.2022 கதிர் 225

**இனிது ரகசியம் அல்ல!**

இந்தியாவின் ஆர்.எஸ்.எஸ். இயக்க உறுப்பினர் ஒருவர் சத்தம் சந்தடியின்றிக் கொழும்புக்கு வந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தி விட்டுச் சென்று இருக்கின்றார் என்ற செய்தி சில வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி

2

# ராஜபக்ஷக்கள் ‘அவுட்’டாவதை தடுத்துக் காத்தவர் ரணில்தான்!

## சுமந்திரன் சரமாரிக் குற்றச்சாட்டு




கொழும்பு, ஜூன் 18

நாட்டைப் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கடித்த ராஜபக்ஷகளின் தர்பார் முற்றாக ‘அவுட்’ ஆகும் நிலையில் இருந்தது. அதற்குள், அறிவற்ற முறையில் இடையில் புகுந்து, அவர்கள் மூச்சு வாங்குவதற்கு நேரம் பெற்றுக் கொடுத்து, ராஜபக்ஷக்களின் அதிகாரத்தைக் காப்பாற்றித் தக்க வைக்க வழி செய்தவர் ரணில் விக்கிரமசிங்கதான். அதன்மூலம் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் அரசியல் ரீதியாக அவர் வரலாற்றுத் தவறு இழைத்திருக்கிறார்.

– இவ்வாறு சாரப்பட சரமாரியான குற்றச்சாட்டுகளை அடுக்கி இருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

03

## சரணடைந்த பின் காணாமலாக்கப்பட்டோரின் ஆள்கொணர்வு மனு மீது தீர்ப்பு ஜூலை 1 இல்!



இறுதியுத்தத்தில்சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அனந்தி சசிதரன் உள்ளிட்டோரால் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி வழங்கப்படவுள்ளதாக சிரேஷ்ட சட்டத்திரணி இரட்ணவேல் தெரிவித்தார்.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு நேற்று வழங்கப்படவிருந்த நிலையில், மீண்டும் திகதி இடப்பட்டதன் பின்னர் இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இத்தகவலைவெளியிட்டார்.

தொடர்ந்தும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

யுத்தத்தின் கடைசிப்

2

## மருத்துவமனையில் பஸில் ராஜபக்ஷ

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ திடீர் சுகயீனமடைந்த நிலையில், தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகின.

எனினும் அவருக்கு என்ன சுகவீனம் ஏற்பட்டுள்ளது என்ற விவரங்கள் வெளியாகவில்லை.

## கரடிகள் தாக்கியதில் குடும்பஸ்தர் படுகாயம்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்காவில் காட்டு பகுதியில் கரடி தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் படுகாய

2

## அரச ஊழியர் மீண்டும் வீட்டிலிருந்து வேலை

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கல்வித் துறை உட்பட அரச ஊழியர்கள் இரண்டு வார காலத்திற்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.


எனினும் அத்தியாவசிய சேவைகளைச் சேர்ந்தோருக்கு இத்திட்டம் பொருந்தாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பான உரிய நடைமுறைகளை அறிவிக்கும் சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சு

2

## ஜனாதிபதி – பிரதமர் இடையில் லடாய் என்கிறார் மைத்திரியார்





ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும்இடையிலான பகைமை ஒரு போட்டி போல மாறியுள்ளது என

03

## பலாலி, காங்கேசனைப் பார்வையிட அமைச்சர் நிமால் இன்று வருகிறார்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஊடான சர்வதேச போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பிக்க முடியுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்காஜ் அமைச்சர் நிமால் சிறிபாலடீ சில்வா இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

2

## நல்லூரில் நாளை போராட்டம்

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு கோரி நாளை ஞாயிற்றுக்கிழமை எதிர்ப்பு போராட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜெனிவா விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல விடயங்களை முன்வைத்து

03

## எவரையும் பசியில் வாட விட மாட்டாராம் ரணில்



உணவுநெருக்கடியில் எவரையும் பசியில் வாடக்கூடாது என்பதே தமது கொள்கை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில்

2

## குளவி கொட்டில் எண்மர் பாதிப்பு



பொகவந்தலாவை பொகவானை தோட்டத்தில் தேயிலை மலையில் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 8 பெண் தொழிலாளர்கள்

03

## மலைக்குருவிக் கூடுகளுடன் பதுளையில் 2 நபர்கள் கைது



சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான மலைக்குருவி கூடுகளுடன் பதுலப்பிட்டிய பகுதியில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பதுளை குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

2

## மலசலகூட குழிக்குள் குழந்தையின் சடலம்

மலசலகூட குழி ஒன்றில் இருந்து இரண்டு வயது குழந்தையின் சடலம் ஒன்று நேற்றுக் காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை வடக்கு, வத்தல்பல, பள்ளிய முல்ல பிரதேசத்தில் வீடொன்றின் பின்புறமுள்ள மலசலகூட குழியிலேயே குழந்தையின்

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இருக்கின்றது.

இந்த விவகாரம் குறித்த விடயங்களை அம்பலப்படுத்திய உள்ள 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' அவர் யாரைப் பிரதிநிதித்துவம் செய்து கொழும்புக்கு வந்து இந்த விடயங்களில் ஈடுபட்டார் என்று கேள்வி எழுப்பியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் ராம் மாதவ் முன்னர் பிரதமர் நரேந்திர மோடிக்கு மிக நெருக்கமாக இருந்தவர். அந்தச் சமயத்தில் அவர் சத்தம் சந்தடி இல்லாமல் கொழும்பு வந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேசி இருந்தமை பற்றிய உள்வீட்டுத் தகவலை அப்போது 'காலைக்கதிரில்' – சில வருடங்களுக்கு முன்னர் – எக்ஸ்குளூசிவ் செய்தியாக வெளியிட்டு இருந்தோம். அதையொட்டி சில தரப்புகளின் அதிருப்தியையும் கூட அப்போது சம்பாதித்திருந்தோம். இப்போது மீண்டும் அவரது பெயர் சர்ச்சைக்கு வந்திருக்கிறது.

ஆனால், அவர் முன்னரைப் போல் இப்போது பிரதமர் நரேந்திர மோடிக்கு மிக நெருக்கமான நிலையில் இல்லை. ஆளும் பா.ஜ.கட்சிக்குள்ளும் அப்படியொன்றும் முக்கிய பொறுப்புகளில் அவர் இப்போது இல்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆளும் பாரதிய ஜனதா கட்சியிலோ அல்லது இந்திய அரசாங்கத்திலோ பொறுப்பான பதவி எதனையும் வகிக்காத ராம் மாதவ், இலங்கை வந்து என்ன விடயங்களில் சம்பந்தப்பட்டார் என்று இந்தியன் எக்பிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

அதானி குழுமத்திற்கு புதுப்பிக்கத்தக்க வலு சக்தித் திட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறித்து இலங்கையில் உருவாகியுள்ள சர்ச்சைகளின் மத்தியில் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் ஒருவர் சத்தம் சந்தடி இல்லாமல் கொழும்பு வந்து திரும்பியமை பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்திய உதவிகளை – முதலீடுகளை – எவ்வாறு பெறுவது என்பது குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோடு அவர் பேச்சு நடத்தினார் என்று வெளியான தகவல்களும் மேலும் சர்ச்சைகளை உருவாக்கி உள்ளன.

முன்னர் ஒரு காலத்தில் – அதாவது 2014 முதல் 2020 வரை – ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயலாளராக இருந்தவர் ராம் மாதவ். ஆனால் இப்போது கட்சியில் பின்தள்ளப்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கின்றார் என்று சில வட்டாரங்கள் கூறுகின்றன.

'இந்திய பவுண்டேஷன்' என்ற அறிவார்ந்த அமைப்பு ஒன்றின் முக்கிய வழிகாட்டுநர் ராம் மாதவ். அதன்மூலம் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்களில் தீர்க்கமான முடிவெடுக்கும் வலிமை – செல்வாக்கு – கொண்டவர் இவர் என்றும் கூறப்படுகின்றது. அவர் 'விஷன் இந்தியா பவுண்டேஷன்' என்ற அமைப்பினுடைய வழிகாட்டியும் கூட.

அவருடைய இலங்கை விஜயத்தின் பின்னால் ஆழமான விடயங்கள் புதைந்திருக்கின்றன என்று கொழும்பில் சில வட்டாரங்கள் தெரிவித்தன. விவகாரம் மலிந்தால் சந்தைக்கு வரும். பார்ப்போம்.

★ ★ ★

Tamil Times ஆசிரியரும், புலம்பெயர் தமிழ் சமூகத்தினிடையே நன்கு மதிக்கப்பட்ட மூத்த ஊடகவியலாளருமான பி.ராஜநாயகம் (வயது 86) நேற்று நம்மை விட்டுப் பிரிந்திருக்கின்றார்.

சுகயீனம் காரணமாக லண்டன் லூயிசம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தோழர் பெரியதம்பி ராஜநாயகம் (ராஜா) நேற்று மதியத்துக்கு சற்று முன்னர் காலமானார்.

1981 அக்டோபர் மாதம் தொடங்கி டிசம்பர் 2006 வரை தொடர்ச்சியாக லண்டனில் இருந்து வெளிவந்த ஆங்கில மாத வெளியீடு தமிழ் டைம்ஸ் (TAMIL TIMES) 25 நீண்ட ஆண்டுகளும் இதன் ஆசிரியராக இருந்தவர் பெ.ராஜநாயகம். தமிழர்களின் 30 ஆண்டுகால அரசியல் போராட்ட காலத்தில் அதன் 25 ஆண்டுகளின் முக்கிய செய்திகளை தாங்கிய பத்திரிகை அது. அதனுடைய முகாமையாளராக நீண்டகாலம் இருந்தவர் காலம் சென்ற என்.எஸ்.கந்தையா. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஒரேட்டர் சுப்ரமணியத்தின் விருப்பத்திற்கு உரிய ஆசிரியர். இவர் ராஜநாயகத்தின் ஆசிரியரும் கூட.

"TAMIL TIMES பத்திரிகையை ஓர் ஆவணப் பொக்கிமாகவே பலர் பார்க்கின்றனர். அதனுடைய ஆசிரிய தலையங்கங்களின் தொகுப்பு இரண்டு நூல்களாக வெளிவந்துள்ளன." – என்று நண்பர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரியதம்பி ராஜநாயகம் மனித உரிமை ஆர்வலர். அதற்காகப் போராடியவர். 1980 களின் ஆரம்பத்தில் இருந்து லண்டனில் Standing Committee of Tamil Speaking People (SCOT) அமைப்புடன் அதிக ஈடுபாடு காட்டிச் செயற்பட்டவர்.

விடுதலைப் போராட்டத்துடன் பயணித்த பல ஊடகப் பெருந்தலைகளை வரிசையாகப் பறிகொடுக்கிறோம்.

போராட்டம் பற்றிய பார்வையின் பதிவுகள் பதியப்படாமலேயே போகின்றன என்பது வேதனைதான்.

– மின்னல் –

## பலாலி, காங்கேசனைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொவிட் 19ஐக் காரணம் காட்டி மூடப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மீள இயக்கவும் காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து காரைக்கால் துறைமுகத்துக்குக் கப்பல் சேவையை ஆரம்பிக்கவும் கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கோரிக்கை விடப்பட்டது.

இதன்போது அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா யாழ்ப்பாணத்துக்கு நேரில் வருகை தந்து விடயத்தைக் கவனிப்பார் எனப் பதிலளிக்கப்பட்டது.

இன்று மதியம் 2 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தலைமயில் இந்தியத் துணைத்தூதுவர் மற்றும் விமான நிலைய அதிகார சபையின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் சகிதம் விசேட கூட்டம் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் பலாலி விமான நிலையத்தை உடன் இயக்குவதில் உள்ள நெருக்கடி தொடர்பாகவும் காங்கேசன்துறை துறைமுகம் ஊடான கப்பல் சேவை தொடர்பாகவும் ஆராயப்படும். பின்பு இரு இடங்களும் நேரில் பார்வையிடப்படவுள்ளன.

## கரடிகள் தாக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் கொக்காவில் காட்டு பகுதியில் உள்ள பெண்ள் இராணுவ முகாமிற்கு பின் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் முறிகண்டி பகுதியைச் சேர்த்த 38 வயதுடைய சிவபால கிருஷ்ணன் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்த நிலையில் மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விறகு வெட்ட சென்றவரையே இவ்வாறு இரண்டு கரடிகள் தாக்கியுள்ளன என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரின் முகத்தில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் அவசர சிகிச்சையின் பின்னர் அவர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## மலைக்குருவிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
44 மற்றும் 47 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்ல – தெமோதர பகுதியில் உள்ள ரயில்வே சுரங்கப்பகுதியில் இருந்து இவ்வாறு மலைக்குருவி கூடுகள் கொண்டுவரப்பட்டன என விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பில் உள்ள வியாபாரி ஒருவருக்கு இந்த மலைக்குருவிக் கூடுகள் விற்பனை செய்யப்பட இருந்தன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மலைக்குருவி கூடுகளில் இருந்து வெளியாகும் மெலியம் கழிவுகளைக் கொண்டு உடல் உறவில் உற்சாகத்தை பெறமுடியும் எனக் கருதப்படுகின்றது. இதனால் மலைக் குருவி கூடு ஒன்று சுமார் 4 லட்சம் ரூபாவுக்கும் பிரபல ஹோட்டல்களில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பதுளை குற்றத் தடுப்பு பிரிவினர் இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கவுணாவத்தை வேள்வி இன்று



(ந. லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன் 18

வலி. வடக்கு கீரிமலை கவுணாவத்தை வயிரவர் ஆலயத்தின் வருடாந்த வேள்வித் திருவிழா இன்று இடம்பெறுகின்றது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த இரு ஆண்டுகளாக இந்த வேள்வித் திருவிழா இடம்பெறாத போதிலும் தற்போது கொரோனா தொற்று கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் சூழலில் இடம்பெறுகின்றது.

வேள்விக்காக நேற்று முதல் மிகப் பெரும் ஏற்பாடுகள் மேற்கொண்டு ஆட்டுக் கடாக்கள் ஆலயம் நோக்கி அழைத்து வரப்பட்டுள்ளன.

இந்த ஆலயத்தில் மிக நீண்டகாலமாக வேளவி இடம்பெறுகின்றபோதும் ஓர் வழக்கின் காரணமாக நான்கு ஆண்டுகள் தடைப்பட்டபோதும், ஆலயத்தினரின் தொடர் முயற்சியினால் தடைகள் தாண்டி வேள்வி இடம்பெறுகின்றது.

இந்த வேள்வி நடைபெறுகின்றமை தொடர்பில் சைவ அபிமானிகள் மத்தியில் கடும் அதிருப்தியும் சீற்றமும் நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மலசலகூட குழிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் சந்தேகத்திற்குரியது என சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த குழந்தை தனது 11 வயது மற்றும் 7 வயதுடைய சகோதரிகளுடன் வீட்டின் பின்புறத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குழந்தையின் தாய் வீட்டில் சமைத்துக்கொண்டிருந்த நிலையில் குழந்தை காணாமல் போனதால் குழந்தையின் தந்தையுடன் இணைந்து தேடியுள்ளார்.

இதன்போது, வீட்டின் களஞ்சிய அறையில் உள்ள மலசல கூட குழியில் குழந்தையின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அதன்போது அயலவர்களின் உதவியுடன் குழந்தையை மீட்டு முச்சக்கர வண்டியில் பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது குழந்தை ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

6 அடிக்கு மேல் ஆழம் கொண்ட மலசல கூட குழியின் மேற்பரப்பை சிறிய தகரத்துண்டு மற்றும் அட்டைப்பெட்டியால் மூடியிருந்தமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குழந்தையின் மரணம் தொடர்பில் குடியிருப்பாளர்கள் தெரிவித்த கருத்துக்கள் முரண்பாடாக உள்ளதாக சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## எவரையும் பசியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்றுக் காலை நடைபெற்ற உணவுப் பாதுகாப்புத் தொடர்பான குழுவின் கூட்டத்தில் உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உணவு நெருக்கடியானது எதிர்காலத்தில் 4 மில்லியன் முதல் 5 மில்லியன் இலங்கையர்களை நேரடியாகப் பாதிக்கக் கூடும் என்றாலும், அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதன்போது அவர் தெரிவித்தார். குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மீது அதிக கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்குப் பிரதமர் அறிவுறுத்தினார்.

உணவு நெருக்கடியைத் தணிக்கும் முயற்சிகளை ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கும் பிரதமர் பணிப்புரை விடுத்தமையுடன், இந்தக் குழுவினால் தயாரிக்கப்படும் திட்டத்தை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அமுல்படுத்த விரும்புகிறார் எனவும் தெரிவித்தார்.

மீனவ மக்களுக்கு உணவு, எரிவாயு மற்றும் எரிபொருள் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்குமாறு அதிகாரிகளுக்கு அவர் மேலும் அறிவுறுத்தினார்.

## சரணடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பகுதியில் சரணடைந்த பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் சம்பந்தமான வழக்கின் தீர்ப்பு வவுனியா மேல் நீதிமன்றத்தில் இன்று (நேற்று) வழங்கப்பட இருந்தபோதிலும், தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் முதலாம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என நீதிமன்றத்தினால் கூறப்பட்டுள்ளது.

ஆகவே ஜுலை மாதம் முதலாம் திகதி நாம் தீர்ப்புக்காக காத்திருக்கின்றோம். – எனத் தெரிவித்தார்.

## அரச ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெளியிடும் எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது. பொது நிர்வாக அமைச்சு இந்தச் சுற்றிக்கையை நேற்று வெளியிட்டது.

நாடு முழுவதும் எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பும் வரை இரண்டு வார காலத்திற்கு இந்த வேலைத்திட்டம் அமுலில் இருக்கும் என ஜனாதிபதி அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகளின் செயற்பாடுகள் தொடர்பிலும் வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு கல்வி அமைச்சுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று முன்தினம் கொழும்பின் பிரபல தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்விடயங்களை விவரித்திருக்கிறார் அந்தப் பேட்டியில் சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்ட இந்தப் பிரதமர் பதவியேற்பு சவாலை அறிவுள்ள வேறு எவருமே செய்திருக்க மாட்டார்கள். செய்ய முன்வந்தும் இருக்க வில்லை.

உண்மையில் அவர் (ரணில்) செய்த விடயம் என்னவென்றால் ராஜபக்ஷக்களுக்கு நெருக்கடிக்கு மத்தியில் நின்று மூச்சுவிடுவதற்கானகாலஅவகாசத்தைப் பெற்றுக் கொடுத்தமைதான். அதன் மூலம் அவர்கள் மீண்டும் தங்களை - தங்கள் அணியை - ஒழுங்கு படுத்திக் கொண்டு வந்துள்ளார்கள். ரணிலின் நடவடிக்கையால்தான் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வர முடிந்திருக்கிறது. காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை தாக்குவதற்கு குண்டர்களை ஏவி விட்டுவிட்டு, இப்போது அவர்களை (காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை) பார்த்து உங்கள் கைகளிலும் இரத்தக் கறைசி இருக்கின்றது என்று அவர் நாடாளுமன்றத்தில் சுட்டுவிரல் நீட்டும் வாய்ப்பை ரணில்தான் பெற்றுக் கொடுத்திருக்கிறார்.

இன்றைய பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு கடந்து வந்த முன்னைய அரசுகள் எல்லாமே ஏதோ ஒரு வகையில் காரணம் என்றாலும் மிக மோசமான நிலைமை ஏற்பட்ட மைக்கு இப்போதைய ஆட்சிபீடம்தான் முக்கிய காரணம். அது மக்களாலும் உணரப்பட்டுள்ளது. அதனால்தான் பிரதமர், மத்திய வங்கி ஆளுநர், திறைசேரிச் செயலாளர் எல்லோரும் பதவி விலக வேண்டி வந்தது. பெரும் தவறுகள் - குற்றமிழைத்தவர்கள் - பதவியிலிருந்து விலகித்தானாக வேண்டும் ஆனால் மிக விநோதமான விடயம் என்னவென்றால் குற்றமிழைத்தவர்கள் - இரண்டாவது மட்டத்தில் இருக்கின்றவர்கள் - பதவி விலகி விட்டார்கள். ஆனால் பிரதான நபர் - தவறுகள் இழைக்கப்பட்டமைக்குப் முழுப் பொறுப்பான ஜனாதிபதி இன்னமும் பதவியில் இருக்கிறார். அவர் அப்படிப் பதவியில் இருப்பதற்கு அவருக்கான அந்த இடத்தை - வாய்ப்பை - அவர் வெளியேறாமல் பதவியை தொடர்வதற்கான இடைவெளியை - பெற்றுக் கொடுத்தவர் ரணில்தான். நிபந்தனை எதுவும் விதிக்காமல் பிரதமர் பதவியை ஏற்று, அந்த இடைவெளியை ஜனாதிபதிக்கு அவர் பெற்றுக்கொடுத்து, அவர் பெரும் தவறு இழைத்து இருக்கிறார்.

தமக்கு அளிக்கப்பட்ட 69 லட்சம் வாக்குகளை இனிமேலும் மக்கள் ஆணையாகக் கருத முடியாது என்ற நிலைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே வந்திருந்தார். அவர் பதவியைத் துறந்து அல்லது கையளித்து அல்லது மாற்று ஏற்பாடுகளைச் செய்து ஓர் ஒழுங்குக்கு வருவதற்கு இடையில் எந்த முன் நிபந்தனைகளையும் இல்லாமல் இடையில் புகுந்து பிரதமர் பதவியை ஏற்று ரணில் குழப்பி விட்டார்.

இப்போது பதவியை - அதிகாரத்தை - விட விருப்பமில்லாமல் அவர் அதைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறார் கோட்டாபய. தவிரவும், அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் செய்த பல விடயங்கள் - தவறுகள் - மூடி மறைக்கப்பட வேண்டும், அதற்கு அதிகாரத்தில் இருப்பது ஒரே வழி என்பதால் அதிகாரத்தை பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

**யுத்தக் குற்றங்கள்**

13 வருடங்கள் ஓடிவிட்டன என்பதற்காக யுத்தக் குற்ற விடயங்கள் மறைந்து அல்லது மறந்து போக மாட்டா. அத்தகைய விடயங்கள் மறைந்து போவது என்பதுவழமையேஇல்லை. கம்போடியாவில் 30 வருடங்களுக்குப் பின்னரும் யுத்தக் குற்றங்கள் விசாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையை நாங்கள் மறந்து விடக்கூடாது. எவரும் கூறும் மறுப்புகளும் அல்லது பொருத்தமற்ற கூற்றுக்களும் அத்தகைய விடயங்களை மறைத்து விடவே மாட்டா.

நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் உண்மையை கண்டறிவதற்கு, உண்மையான - வலிமையான - ஒரு கட்டமைப்பை, விசாரணைக் குழுவை அமைப்பதுதான்.

இரண்டு பக்கமும் விசாரிக்கப்பட வேண்டும். அதில் வேறு கருத்து இல்லை.

அத்தகைய விடயங்கள் நேர்மைத் தன்மையுடனும் வெளிப்படையாகவும் முன்னெடுக்கப்படுமானால், அதன் பின்னர் அந்த விடயங்களைத் தள்ளிவைத்து - விட்டு, அதிலிருந்து முன் நகர்வதற்கான முடிவுக்கு எங்களுடைய மக்கள் வருவார்கள் என்று நான் நம்புகிறேன். முக்கியமான சம்பவங்கள் சில ஆழமாக நுணுகி விசாரிக்கப்பட வேண்டும்தான். ஆனாலும் ஒட்டுமொத்தத்தில் அவை முழுவதையும் சுமந்துகொண்டு, பழி வாங்கிக் கொண்டிராமல், அவற்றைப் பக்கமாக வைத்து முன்னேறுவதற்கான மனப்பாங்கு அதற்கு பின்னர் வரும். எதிர்கால முன்னேற்றங்கள் குறித்து எமது மக்களும் அப்போது சிந்திப்பார்கள். அப்படி இல்லாமல் எல்லாவற்றையும் மூடிவைத்துவிட்டு நீங்கள் முன்நகரலாம் என்று நினைத்தால், அது உள்ளே புண்ணாக்கி சீழ் பிடித்து, நெருக்கடியாக வலி வருவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

**இனப்பிரச்சினைத் தீர்வு**

பொருளாதார நெருக்கடிகளுக்கு அப்பால் இந்த நாடு நீண்ட இனப்பிரச்சினை நெருக்கடிக்குள் சிக்குண்டு கிடக்கிறது. அதற்கும் நாங்கள் தீர்வு காண வேண்டும். அதற்கு இந்த நாட்டில் உள்ள எல்லா மக்களுடைய நோக்கத்தோடும் ஒரு புரிந்துணர்வு தீர்வை நாங்கள் காண்போமானால் அது உலகளாவிய ரீதியில் இலங்கையின் மீது மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தும்.

இன்றைய பொருளாதார நெருக்கடியை நாங்கள் எதிர்கொள்வதற்கும், சர்வதேசத்தின் நம்பிக்கையை - எங்கள் மீதான அவர்களின் ஈடுபாட்டை - அதிகரிக்கச் செய்வதற்கு இத்தகைய நல்லிணக்கம் எங்களுக்குள் இருக்கின்றது என்ற வெளிப்படுத்தல் மிகுந்த ஊக்கமாக அமையும். புலம் பெயர் தேசத்தில் இருக்கும் எங்கள் மக்கள் மாத்திரமல்லாமல், சர்வதேசமே எங்களின் மீது நம்பிக்கை வைத்து எங்களோடு பங்காளிகளாக சேர்ந்து இயங்கி, நமது நாட்டை தூக்கி விடுவதற்கான சூழலை ஏற்படுத்தும். ஆகவே, இனப்பிரச்சினைக்கான தீர்வும் உடனடியாக விரைந்து காணப்பட வேண்டும். இதுவே அதற்கான பொருத்தமான - கட்டாயமான - மிக முக்கியமான - சமய சந்தர்ப்பம். - என்றார்.

## நல்லூரில் நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக குடிசார் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

எனவே, அனைத்து மக்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு வலுச் சேர்க்க வேண்டும் என தென்மராட்சி குடிசார் அமைப்பின் பிரதிநிதி க.அருந்தவபாலன் அழைப்பை விடுத்துள்ளா

ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கைலாசப் பிள்ளையார் கோவில் முன்பாக போராட்டமொன்றை மேற்கொள்ள சிவில் அமைப்புகள் அழைப்பு விடுத்துள்ளன.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தென்மராட்சி சிவில் அமைப்பின் பிரதிநிதி க.அருந்தவபாலன் போராட்டத்திற்கான அழைப்பை விடுத்தார்.

இவ் ஊடக சந்திப்பில் சமூக விஞ்ஞான ஆய்வுமையம், குரலற்றவர்களின் குரல் அமைப்பு, அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பு, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

## ஜனாதிபதி - பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்த வேளை காணப்பட்டது போன்ற நிலைமை தற்போது காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் இடையில் ஒருங்கிணைப்பு, பரஸ்பர புரிந்துணர்வு, ஐக்கியம் இல்லை என்பது தெளிவான விடயம் என தெரிவித்துள்ள சிறிசேன, இதன் காரணமாகவே கோட்டாபய - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முழுமையாக தோல்வியடைந்துள்ளது. நாட்டையும் அதன் மக்களையும் புரிந்துகொள்ளமுடியாத புதைகுழிக்குள் இந்த நிலைமை இட்டுச் சென்றுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் தற்போது தனித்தனியாக அரசாங்க அதிகாரிகளை, பிரதிநிதிகளை, தொழிற்சங்கத்தினரைச் சந்திப்பதை சந்திக்கின்றமையையும் உத்தரவிடுகின்றமையையும் வழக்கமாக கொண்டுள்ளனர் எனவும் மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

தங்களது செயற்பாடுகளில் அவர்கள் தோல்வியடைந்துள்ள போதிலும் ஒருவருக்கொருவர் சவால் விடும் விதத்தில் அவர்கள் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். ஒருவரையொருவர் தோற்கடிப்பதற்கான போட்டியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனரோ என எண்ணத்தோன்றுகின்றது எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

21ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய பின்னர், ஜனாதிபதியும் பிரதமரும் இணங்கியுள்ளமை போல அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதே யதார்த்தபூர்வமான தீர்வு என மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

# துன்னாலைக் கொள்ளை; மூவர் கைது! இதுவரை ஐந்தரைப் பவுண் நகை மீட்பு



பருத்தித்துறை துன்னாலை - மடத்தடியில் நள்ளிரவு வேளை வீடுடைத்து உள்நுழைந்து அங்கிருந்த 6 பேருக்கு காயங்களை விளைவித்து 12 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை உடைமையில் வைத்திருந்த பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் வீட்டுக் கதவினை உடைத்து வாள்களுடன் உள்நுழைந்த 6 பேர் கொண்ட கும்பல் அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராக்களை சேதப்படுத்தியதுடன், வீட்டிலிருந்த 6 பேரை தாக்கி காயங்களை ஏற்படுத்தி, 12 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பித்தது.

சம்பவத்தையடுத்து படுகாயமடைந்தவர்கள் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில், பலாலி பகுதியில் வைத்து 36 வயதுடைய ஒருவரும் முடவத்தையைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் மேலும் ஓர் ஆணும் கொள்ளையிட்ட நகைகளை உடைமையில் வைத்திருந்தவர் எனக் கூறப்படும் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து கொள்ளையிட்ட நகைகளில் ஐந்தரைப் பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய மூவர் தேடப்பட்டு வருகின்றனர். சந்தேக நபர்கள் பயன்படுத்திய வாள்களும் கைப்பற்றப்பட்டன.

மேலதிக நடவடிக்கைகளுக்காக சந்தேக நபர்கள் நால்வரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

# வீட்டுத்தோட்ட விதைகள் பசளைகள் விநியோகம்





சாந்தி அக்ரோ நீட்ஸ் உதவித்திட்டத்தின் கீழ், பணம் கொடுத்து வாங்குமுடியாதவர்களுக்கும், விசேட தேவை உடையவர்களுக்குமான வீட்டுத்தோட்ட விவசாயத்திற்கான விதைகள், தெளிகருவிகள் மற்றும் சேதனப் பசளைகள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் நான்காவது நாளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் மக்கள் எதிர் நோக்கிக்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை கருத்தில்கொண்ட, சாந்தி அக்ரோ நீட்ஸ் உதவித்திட்டம் 2022 இன் கீழ் கடந்த 15.06.2022 - இன்று 18.06. 2022 வரை பணம் கொடுத்து வாங்க முடியாதவர்களுக்கும், விசேட தேவை உடையவர்களுக்குமான வீட்டுத்தோட்ட விவசாயத்திற்கான விதைகள், தெளிகருவிகள் மற்றும் சேதனப்பசளைகள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் நான்காவது நாளாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இதுவரையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களுக்கான வீட்டுத்தோட்ட விவசாயத்திற்கான பொருள்களைப் பெற்றுச்சென்றுள்ளனர். இவ் வீட்டுத்தோட்ட விவசாயத்திற்கான பொருட்கள் வழங்கும் நிகழ்வானது திருநெல்வேலி சந்தி சம்பத் வங்கிக்கு அருகாமையிலுள்ள அக்ரோ நீட்ஸ் நிலையத்தில் நடைபெறுகிறது என்பதனையும் அக்ரோ நீட்ஸ் சார்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு விதைகள், தெளிகருவிகள் மற்றும் சேதனப் பசளைகள் தேவைப்படுபவர்கள் அங்கு சென்று பெற்றுக்கொள்ளலாம் என அதன் தலைவர் திரு.தேவதுரை ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## குளவி கொட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குளவி கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மரத்திலிருந்த குளவிக் கூடு மதியம் ஒரு மணியளவில் கலைந்து வந்து தொழிலாளர்களை தாக்கியுள்ளதாக காயங்களுக்கு உள்ளான தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

காயங்களுக்கு உள்ளான 8 பெண் தொழிலாளர்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீர்வுக்கும் இதுவே உரிய தருணம்

**கொழும்பின் தொலைக்காட்சி ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தென்னிலங்கைத் தலைவர்களுக்கும் சிங்கள தேசத்துக்கும் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அவை நோக்கப்பட வேண்டியவை.**

**முதலாவது – யுத்தக் குற்றங்கள் பற்றிய விடயம். பதின்மூன்று வருடங்கள் கடந்து விட்டமையால் யுத்தக் குற்றங்கள் மறந்து, மறைந்து போய் விடும் என்று கருதாதீர்கள் என்ற செய்தியை, முப்பது வருடங்களுக்குப் பின்னரும் கம்போடியாவில் யுத்தக் குற்றங்கள் விசாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டமையை நினைவூட்டி சிங்கள தேசத்துக்கு நிலைமையை உணர்த்தியிருக்கின்றார் அவர்.**

**உண்மையான, நேர்மையான, வலிமையான விசாரணைப் பொறிமுறை மூலம் நடந்தவற்றை வெளிக் கொணருங்கள். அதன் பின்னர் நடந்து – கடந்து – போன அந்த விடயங்களைத் தொடர்ந்தும் முன்னிறுத்தி, எதிர்காலத்தைப் பாதிக்கச் செய்ய நமது மக்கள் விரும்பமாட்டார்கள். உண்மைகள் உண்மையாகவே அம்பலப்படுத்தப்படுமானால், அவை தொடர்பில் சில இணக்கங்களைக் கண்டு அதன் பின்னர் அவற்றைப் பக்கத்தில் தள்ளி வைத்து விட்டு, முன்னோக்கி நகர எமது மக்களும் முன்வருவார்கள் என்று நான் நம்புகிறேன் என்ற சாரப்பட அவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.**

**அதைச் செய்யத் தவறுவீர்களேயானால் உள்ளே சீழ்ப்பிடித்த புண்போல இந்த விவகாரம் பரவி நாட்டின் எதிர்காலத்தையே மண்ணாக்கி விடும் என்று அவர் சிங்களத் தலைமைகளுக்கு நிலைமையை வெளிப்படையாக எடுத்துரைத்திருக்கின்றார்.**

**அடுத்தது – பொருளாதார நெருக்கடியிலிருந்தும் நாட்டை மீட்பதற்கு தேசிய இனப்பிரச்சினைக்கும் சேர்ந்து தீர்வு காண்பது மிக மிக அவசியம் என்று சுட்டியுள்ள அவர், அதற்கான மிகப் பொருத்தமான சமய சந்தர்ப்பம் இதுதான் என்றும் வலியுறுத்தியிருக்கின்றார்.**

**இந்த நாட்டில் எழுபது ஆண்டுகளுக்கு மேல் புரையோடிக் கிடக்கும் இனப்பிரச்சினைக்கு இந்த நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை – இணக் கத்தை – இந்தச் சமயத்தில் காண்போம் என்றால், அது முழு சர்வதேசத்தையும் இலங்கையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைக்கும் என்பது சுமந்திரன் சுட்டுவது போல உண்மையான விடயம்தான்.**

**அத்தகைய நிலைமையில் இலங்கை நாட்டின் மீது சர்வதேசத்தின் நம்பிக்கை அதிகரிக்கும். இந்த நல்லிணக்கத்தை நிலையானதாக உறுதிப்படுத்துவதற்கான தங்கள் உதவியாகவும் தமது பங்களிப்பை நல்குவதற்கு சர்வதேச நாடுகள் முன்வரும்.**

**அத்தோடு தமது மண்ணின் மீது பற்றுதல் கொண்ட நமது புலம்பெயர் மக்களும் சந்தேகங்களைத் துறந்து நம்பிக்கையுடன் இந்த நாட்டில் முதலீடு செய்யத் தாங்களாகவே முன்வருவார்கள்.**

**அவை டொலர் வருமானத்தை – அந்நிய செலாவணிக் கையிருப்பை – மேம்படுத்தி நாட்டை மீண்டெழ வழி செய்யும்.**

**நெருக்கடிகளுக்கு மத்தியில்தான் தீர்வுகள் பிறக்கும். அரசியல் தலைமைகள் இனவாதச் சிந்தனைகளில் இருந்து வெளிப்பட்டு நேர்மை – நீதி – நியாயம் – மனிதாபிமானம் – பிற இனங்களையும் மதித்தல் – எல்லோருக்கும் கௌரவ வாழ்வை உறுதிப்படுத்துதல் போன்ற உயர் பண்பியல்புகளுடன் இவ்விடயங்களை அணுகினால் விரைந்த தீர்வு நிச்சயம் சாத்தியமாகும்.**

## குறைந்த வருமானமுடைய விவசாயக் குடும்பங்களுக்கு யூரியா உர மூடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை

### அமைச்சர் மஹிந்த அமரவீர தகவல்



நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் குறைந்த வருமானம் பெறும் விவசாயக் குடும்பங்களுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் யூரியா உர மூடைகளை வழங்குவதற்கு உணவு மற்றும் விவசாய அமைப்பு இணக்கம் தெரிவித் துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி,குறைந்த வருமானம் பெறும் 3 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா ஒரு மூடை யூரியா உரத்தை விநியோகிக்கப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டின் விவசாய சமூகத்தின் பொருளாதார நிலையை முன்னேற்றுவதற்குத் தேவையான ஆதரவை வழங்குவதற்காக, எதிர்வரும் பெரும்போக விவசாயத்தைக் கருத்திற் கொண்டு இலங்கையில் பல்வேறு விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த உலக உணவுத் திட்டம் இணங்கியுள்ளது.

மேலும், பெண்கள் தலைமை வகிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்படி, பெண்கள் தலைமை வகிக்கும் குறைந்த வருமானம் பெறும் 14 ஆயிரம் குடும்பங்களுக்கு பயறு உற்பத்திக்காக தலா 18 ஆயிரம் ரூபா வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான பச்சைப் பயறு, சோளம், சோயா போன்ற பயிர்களை அடுத்த பருவத்தில் பயிர் செய்வதற்கு முன்னுரிமை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

## தேசபந்து தென்னகோனை கைது செய்ய தனிப்பட்ட முறைப்பாடு நீதிமன்றில் தாக்கல்



மைனா கோ கம, கோட்டா கோ கம மீதான அரசாங்க ஆதரவாளர்களின் அத்துமீறிய தாக்குதல்களின் போது, கடமை தவறினார் எனக் கூறி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்ன கோனை கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்ய உத்தரவிடுமாறு கோரி தனிப்பட்ட முறைப்பாட்டு மனுவொன்று தாக்கல் செய் யப்பட்டுள்ளது.

குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையின் 136 (1) ( அ) அத்தியாயத்தின் கீழ் கோட்டை நீதிவான் நீதிமன்றில் இந்த தனிப்பட்ட மனு (ப்ரிவடெ ப்லைன்ட்) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அலரி மாளிகைக்கு அருகே நடந்த தாக்குதல்களின் போது கடும் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற வர்த்தகர் செய்யத் மொஹம்மட் நியாஸ் மௌலானா என்பவரே இந்த தனிப்பட்ட முறைப்பாட்டு மனுவை, சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன ஊடாகத் தாக்கல் செய்துள்ளார்.

இந் நிலையில் மேற்படி மனு, கோட்டை நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை பரிசீலிக்கப்பட்ட போது, மனுதாரருக்காக மன்றில் ஆஜரான சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன, மேற்படி மனுவை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு மாற்றுமாறு கோரினார்.

காலிமுகத்திடல்சார் மக்கள் போராட்டங்களை மையப்படுத்திய வழக்குகளை கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் விசாரிக்கக் கூடாது எனக் கூறி, நீதிச் சேவை ஆணைக் குழுவுக்கு முறைப்பாடளித்த சட்டத்தரணிகளில் தானும் ஒருவர் என்பதால், இந்த மனுவை கோட்டை நீதிமன்றில் விசாரிக்காது கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு மாற்றுமாறு சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன குறிப்பிட்டார்.

இதனையடுத்து முறைப்பாட்டாளர் தரப்பின் கோரிக்கை பிரகாரம், மனுவை கொழும்பு பிரதான நீதிவானுக்கு மாற்றி கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டார்.

கடந்த மே 9 ஆம் திகதி மைனா கோ கம, கோட்டா கோகம மீதான தாக்குதல்களின் போது, தான் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றேன் எனவும், தேசபந்து தென்ன கோன் தனது கடமையை சரியாக செய்திருந்தால் தான் தாக்குதலுக்குள்ளாகியிருக்கப்படமாட்டேன் எனவும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில் மேற்படி பொலிஸ் அதிகாரி தனது கடமையை சரிவர செய்யாது பொலிஸ் கட்டளை சட்டத்தின் 56, 82,83 ஆம் அத்தியாயங்களை மீறியுள்ளார் எனவும் அதனால் அவரைக் கைது செய்து மன்றில் ஆஜர் செய்ய உத்தரவிடுமாறும் மனுதாரர் மனுவூடாகக் கோரியுள்ளார்.

## எதிர்காலத்தில் ரயில்களையும் இயக்க முடியாமல் போகலாம்?

கொழும்பு, ஜூன் 18

இயந்திரங்களுக்குத் தேவையான எண்ணெய் பற்றாக்குறை காரணமாக எதிர்காலத்தில் ரயில்களை இயக்க முடியாமல் போகலாம் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள இயந்திரங்களுக்குத் தேவையான எண்ணெய் இன்னும் இரண்டு மாதங்களுக்கு மாத்திரமே போதுமானது என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இயந்திர எண்ணெய் இறக்குமதிக்கான கடன் கடிதங்களை திறக்க டொலர்கள் இல்லை எனவும் ரயில்வே திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த சூழ்நிலையில், தற்போது இயக்கப்படும் ரயில்களில் ஒரு பகுதி சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இயந்திரங்களுக்குத் தேவையான எண்ணெய் இந்தியா மற்றும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இதேவேளை, தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக ரயில்களில் பயணிப்போரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

இதன்காரணமாக ரயில் நிலையங்கள் பொதுமக்களால் நிரம்பி வழிவதையும் அவதானிக்க முடிகின்றது.




# இந்திய இளைஞர்களுக்கு முப்படைகளிலும் சேவை 4 வருடங்களுக்கு மட்டும்!

## புதிய, கவர்ச்சிகரமான வாய்ப்பை அறிவித்தது பாரத அரசு

ஒரு மாற்றத்தக்க சீர்திருத்தமாக, ஆயுதப்படைகளில் இளைஞர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கான ‘அக்னிபாத்’ (அக்னிப் பாதை) திட்டத்தை இந்திய அரசாங்கம் அனுமதித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர்கள் ‘அக்னிவீரர்கள்’ என்று அழைக்கப்படுவார்கள். அக்னிபத் தேசபக்தி மற்றும் ஊக்கமளிக்கும் இளைஞர்களை ஆயுதப்படைகளில் நான்கு ஆண்டுகள் பணியாற்ற அனுமதிக்கிறது.

இந்த திட்டத்தை வெளியிட்டு பேசிய இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அக்னிபாத் திட்டத்தின் கீழ் இந்திய இளைஞர்கள் ஆயுதப்படைகளில் அக்னி வீரர்களாக பணியாற்ற வாய்ப்பு வழங்கப்படும்.” என்றார்.

அக்னிவீரர்களுக்கு கவர்ச்சிகரமான தனிப் பயனாக்கப்பட்ட மாதாந்திர கட்டமைப்பு வேதனம் மற்றும் மூன்று சேவைகளுக்கும் பொருந்தும் வகையில் ஆபத்து மற்றும் கஷ்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும். பணி உறுதிக் காலம் நான்கு ஆண்டுகள் நிறைவடைந்தவுடன், அக்னிவீரர்களுக்கு ஒரு முறை ‘சேவா நிதி’ தொகுப்பு வழங்கப்படும். அது, அவர்களின் பங்களிப்பை உள்ளடக்கியதாக இருக்கும். அதில் திரட்டப்பட்ட வட்டி மற்றும் வட்டி உட்பட அவர்களின் பங்களிப்பில் திரட்டப்பட்ட தொகைக்கு சமமாக அரசாங்கத்தின் பங்களிப்பு ஆகியவை அடங்கும்.

‘சேவா நிதி’க்கு வருமான வரியில் இருந்து விலக்கு அளிக்கப்படும். எனினும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய பலன்களுக்கு எந்த உரிமையும் இல்லை. அக்னிவீரர்கள் இந்திய ஆயுதப் படைகளில் பணியாற்றும் காலத்துக்கு ரூ.48 லட்சத்துக்கு பங்களிப்பு இல்லாத ஆயுள் காப்பீடு அளிக்கப்படும்.


“அக்னிவீரர் பதவிக்காலத்திற்குப் பிறகு சிவில் உலகில் அவர்களின் முன்னேற்றத்திற்கான வழிகள் மற்றும் வாய்ப்புகள் நிச்சயமாக தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு பெரிய நன்மையாக இருக்கும். மேலும், சேவை முடிவில் கிட்டும் சுமார் 11.71 லட்சம் ரூபா மதிப்பிலான ‘சேவா நிதி’ நிதி நெருக்கடியின்றி அக்னிவீரன் தனது எதிர்காலக் கனவுகளைத் தொடர உதவும். இது பொதுவாக சமூகத்தின் நிதி ரீதியாகப் பின்தங்கிய அடுக்குகளைச் சேர்ந்த இளைஞர்களுக்குப் பொருந்தும், என்று பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.



## ‘அக்னிப் பாதை’ திட்டத்தில் ’அக்னி வீரர்கள்’ ஆள்சேர்ப்பு

அக்னிபாத் திட்டம் ஆயுதப்படைகளின் இளைஞர்களின் சுயவிவரத்தை செயல்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்கால தொழில்நுட்பப் போக்குகளுடன் மிகவும் ஒத்துப்போகும் மற்றும் திறமையான, ஒழுக்கம் மற்றும் ஊக்கமளிக்கும் மனிதவளத்தை சமூகத்தில் மீண்டும் சீர்படுத்துதல் மற்றும் சமூகத்தில் இருந்து இளம் திறமைகளை ஈர்ப்பதன் மூலம் சீருடை அணிய ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு இது ஒரு வாய்ப்பை வழங்கும்.

ஆயுதப் படைகளைப் பொறுத்தவரை, இது (இப்படி இளைஞர்களை இணைப்பது) ஆயுதப் படைகளின் இளமைத் தன்மையை மேம்படுத்தும். ‘ஜோஷ்’ மற்றும் ‘ஜஸ்பா’ ஆகியவற்றின் புதிய குத்தகையை வழங்கும் அதே நேரத்தில் அதிக தொழில்நுட்ப ஆர்வமுள்ள ஆயுதப் படைகளை நோக்கி மாற்றத்தை ஏற்படுத்தும் – இது உண்மைதான். காலத்தின் தேவை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இந்திய ஆயுதப்படைகளின் சராசரி வயது விவரம் சுமார் நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் வரை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தேசிய திறன்கள் தகுதிகள் கட்டமைப்பு போன்ற அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்களின் சிறப்பு பேரணிகள் மற்றும் வளாக நேர்காணல்களுடன் மூன்று சேவைகளுக்கும் ஒன்லைன் மையப்படுத்தப்பட்ட அமைப்பின் மூலம் பதிவுசெய்யப்படும். ‘அனைத்திந்திய அனைத்து வகுப்பு’ அடிப்படையில் பதிவுசெய்யப்படும் மற்றும் தகுதியான வயது 17.5 முதல் 21 ஆண்டுகள் வரை இருக்கும். அந்தந்த பிரிவுகள்/முறைமைகளுக்கு பொருந்தும் வகையில், ஆயுதப் படைகளில் சேர்வதற்கு விதிக்கப்பட்டுள்ள மருத்துவத் தகுதி நிபந்தனைகளை அக்னிவீரர்கள் பூர்த்தி செய்ய வேண்டும். அக்னிவீரர்களுக்கான கல்வித் தகுதி பல்வேறு பிரிவுகளில் சேர்வதற்கான நடைமுறையில் இருக்கும்.

இது மூன்று சேவைகளின்(இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின்) மனித வளக் கொள்கையில் ஒரு புதிய சகாப்தத்தை உரு வாக்க இந்திய அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பெரிய பாதுகாப்பு கொள்கை சீர்திருத்தமாகும். உடனடியாக நடைமுறைக்கு வரும் இந்தக் கொள்கை, இப்போது மூன்று சேவைகளுக்கான சேர்க்கையை நிர்வகிக்கும்.




தேசத்திற்கு சேவை செய்யும் இந்த கால கட்டத்தில், அக்னிவீரர்களுக்கு பல்வேறு இராணுவ திறன்கள் மற்றும் அனுபவம், ஒழுக்கம், உடல் தகுதி, தலைமைப் பண்பு, தைரியம் மற்றும் தேசபக்தி ஆகியவை வழங்கப்படும். இந்த நான்கு வருட காலத்திற்குப் பிறகு, அக்னிவீரர்கள் சிவில் சமூகத்தில் உட்செலுத்தப்படுவார்கள். அங்கு அவர்கள் தேசத்தைக் கட்டியெழுப்பும் செயல்முறைக்கு மகத் தான பங்களிப்பை வழங்க முடியும். ஒவ்வொரு அக்னி வீரரும் பெற்ற திறமைகள் அவரது தனிப்பட்ட விண்ணப்பத்தின் ஒரு பகுதியாக உருவாக்க ஒரு சான்றிதழில் அங்கீகரிக்கப்படும். அக்னிவீரர்கள், தங் களின் இளமைப் பருவத்தில் நான்கு வருட பதவிக் காலத்தை முடிக்கும் போது, முதிர்ச்சியடைந்து, சுய ஒழுக்கத்துடன் தொழில் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் தன் னைப் பற்றிய சிறந்த பதிப்பாக மாறுவதை உணர்ந்து கொள்வார்கள் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

ஆயுதப் படைகளில் வழக்கமான பணியாளராகச் சேர்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிநபர்கள், குறைந்த பட்சம் 15 ஆண்டுகள் மேலும் கட்டாய காலத்திற்குப் பணியாற்ற வேண்டும். ‘ஜூனியர் கமின்ட் செய்யப்ப அதிகாரிகள், பிற தரவரிசைகளின் தற்போதைய சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளால் நிர்வகிக்கப்படுவார்கள். இந்திய ராணுவத்தில் மற்றும் இந்திய கடற்படை மற்றும் இந்திய விமானப் படையில் அவர்களுக்கு சமமானவர்கள் மற்றும் இந்திய விமானப்படையில் பதிவுசெய்யப்பட்ட போர் தொடர்பில்லாதவர்கள் தொடர்பான சேவை விதிமுறைகள் அவ்வப்போது திருத்தப்பட்டுள்ளன.




ஆனால், இந்த சேவை விதிமுறைகளுக்குள் அக்னி வீரர்கள் ஆள்சேர்ப்பு வராது.

அக்னிபாத் திட்டத்தின் கீழ், அக்னிவீரர்கள் நான்கு ஆண்டுகளுக்கு அந்தந்த சேவைச் சட்டங்களின் கீழ் படைகளில் பதிவு செய்யப்படுவார்கள். அவர்கள் ஆயுதப் படைகளில் ஒரு தனித்துவமான தரவரிசையை உருவாக்குவார்கள். எனினும் தற்போதுள்ள மற்ற அணிகளில் இருந்து அவர்கள் வேறுபட்டவர்களாக இருப்பார்கள். நான்கு வருட சேவையை முடித்தவுடன், நிறுவனத் தேவைகள் மற்றும் ஆயுதப் படைகளால் அவ்வப்போது அறிவிக்கப்படும் கொள்கைகளின் அடிப்படையில், அக்னிவீரர்கள் ஆயுதப் படைகளில் நிரந்தரமாகச் சேர்வதற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் நான்கு வருட கட்டமைக்கப்பட்ட காலத்தின் செயல்திறன் உட்பட புறநிலை அளவுகோல்களின் அடிப்படையில் ஒரு மையப்படுத்தப்பட்ட முறையில் பரிசீலிக்கப்படும். மற்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட அக்னிவீரர்கள் குழுவிலும் 25 சதவீதம் வரை ஆயுதப்படைகளின் வழக்கமான ஆளணியில் பதிவு செய்யப்படும்.

மூலம்:-ஐ.ஏ.என்.எஸ்.

# 3 ஆயிரத்து 500 பேக்கரிகள் நாட்டில் மூடப்பட்டுள்ளன!

நாட்டிலுள்ள சுமார் 3 ஆயிரத்து 500 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன.

இதன்காரணமாக பேக்கரி தொழிலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டிருந்த சுமார் 2 லட்சம் பேர் வேலையை இழந்துள்ளனர் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எரிவாயு, டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக பேக்கரி தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்காரணமாக 50 சதவீதமான பேக்கரிகள் செயற்படாமல் உள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

முட்டை, வெண்ணெய், மரக்கறி, தேங்காய் எண்ணெய் போன்றவற்றை பேக்கரித் தொழிலுக்கு வழங்குபவர்களும் தங்களது வருமான ஆதாரங்களை இழந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், பேக்கரிகளின் உரிமையாளர்கள் வங்கிகளில் பெற்ற கடனைக் கூடத் திருப்பிச் செலுத்த முடியாமல் சிரமப்படுகின்றனர் எனவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பேக்கரி உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தருமாறு பிரதமருக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்டன எனவும் அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேக்கரி பொருள்களின் விற்பனையும் சரிவடைந்துள்ளதால், எதிர்காலத்தில் பணிஸ் ஒன்றின் விலை 100 ரூபாவாக அதிகரிக்கும் எனவும், அதனைத் தவிர்க்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

பெற்றோல் நெருக்கடியால் 90 சதவீதமான பேக்கரி உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பேக்கரி பொருள்களை விநியோகம் செய்யும் லொறிகள் 5 முதல் 6 நாள்கள் வரை பெற்றோல் நிலையங்களில் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இதனால், தினசரி பேக்கரி பொருள்களின் விநியோகம் தடைப்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

# இந்திய அரசுக்கும் தமிழக முதல்வருக்கும் இலங்கை வாழ் தமிழர்கள் சார்பில் நன்றி!

## கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவிப்பு



இக்கட்டான காலகட்டத்தில் இலங்கைக்கு நிவாரண உதவிப் பொருள்களை வழங்கி உதவியமைக்காக இந்திய அரசுக்கும் தமிழக முதல்வருக்கும் இந்துமாமன்றத்தின் உப தலைவரும் சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவரும் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் நன்றி பாராட்டிக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மிக இக்கட்டான காலகட்டத்தில் இலங்கை வாழ் மக்கள் தவிக்கும் வேளையில் இந்தியப் பிரதமரும் தமிழ்நாட்டு முதல்வரும் அரிசி, மா போன்ற பொருள்களை அனுப்பிவைத்தமை மிகவும் நன்றிக்குரிய விடயமாகும். வறுமைக்குட்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் அவசர நிவாரணப் பொருள் கிடைத்துள்ளது.

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பல கோடி ரூபா செலவில் இந்தப் பொருள்களை அன்பளிப்பாக வழங்க முன்வந்த போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அதற்கான அனுமதியை வழங்கி எமது மக்கள் மீது அக்கறை கொண்டுள்ளமை பாராட்டுக்குரியது.

குறிப்பாக வடக்கில் உள்ள யாழ் போதனா வைத்தியசாலைக்கு அவசர மருந்துத் தேவைகளின் ஒரு பகுதியை இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டுள்ளமை மெச்சத்தக்க விடயமாகும். மேலும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் கு.அண்ணாமலை யாழ்ப்பாணத்துக்கு நேரில் வருகைதந்து பல தரப்பினரையும் சந்தித்தமை சிறப்புக்குரியது.

குறிப்பாக மருத்துவ உதவியோடு பலரது வேண்டுதலாக உள்ள பலாலி இந்திய விமான சேவை கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட உள்ள செய்தி வரவேற்கத்தக்கதாகும். இந்தியப் பிரதமரும் தமிழகத் தமிழர் கட்சிகளும் இலங்கைத் தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

கடந்த காலங்களில் குறிப்பாக வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தகாலத்தில் எமது மக்களுக்காக இந்திய அரசு, தமிழக அரசு நீதியான தீர்வை உருவாக்கவில்லை என்ற கவலை மக்கள் மனதில் நீடித்திருந்த நிலையிலும் தற்போது இந்திய அரசும் தமிழக அரசும் இலங்கை விவகாரத்தில் அக்கறை செலுத்தத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. மேலும் இந்நாட்டு மக்கள் போரால் பட்ட இந்தத் துன்பத்துக்கு இன்றைய பொருளாதாரப் பிரச்சினையால் மேலும் துன்பப்படுவதை அனைத்துலகமும் அறியும்.

எனவே வல்லமையும் வலிமையும் மிக்க பொருளாதார கட்டமைப்பைக் கொண்ட இந்திய தேசம் தனது உற்ற உறவுத் தொடர்புடைய இலங்கைத் திருநாட்டை அழிவிலிருந்து காப்பாற்றி சத்திய வழியில் நின்று தொடர்ந்து உதவ வேண்டும் என அன்போடு வேண்டுகிறோம். – என்றுள்ளது.

# வீட்டுத் தோட்டத்தைச் சுத்தம் செய்ய வெள்ளி விடுமுறையை பயன்படுத்துக!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆலோசனை

வெள்ளிக்கிழமை விடுமுறையை வீட்டுத் தோட்டம் மற்றும் சுற்றுச்சூழலை சுத்தம் செய்ய பயன்படுத்துமாறு அரசாங்க மருத்துவ அதிகாரி கள் சங்கம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

டெங்கு தொற்று மற்றும் நுளம்பு பெருகும் இடங்கள் அதிகரித்து வருவதால், இவ்வாறு சுற்றுச்சூழலை சுத்தம் செய்யுமாறு அந்தச் சங்கத்தின் உறுப்பினர் பிரசாத் கொலம்பகே ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது, இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2020ஆம் ஆண்டில், 31 ஆயிரம் டெங்கு தொற்றுகள் மட்டுமே பதிவாகியுள்ளன எனவும் ஆனால் கடந்த ஆறு மாதங்களில் மாத்திரம் 25ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றுகள் பதிவாகியுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்குகளில் பெரும்பாலானவை மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளன என்றும் குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் அதிக தொற்றுகள் பதிவாகியுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

டெங்கு நோயாளர்களின் அதிகரிப்பால் இறப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த அபாயம் தொடர்பாக மக்கள் மற்றும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் இல்லையெனில், எதிர்காலத்தில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளில் டெங்கு பரவல் தொடர்பாக கவனம் செலுத்தத் தவறியுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள வெள்ளிக்கிழமை விடுமுறையை மக்கள் தங்கள் சொந்த தோட்டங்களையும் சுற்றியுள்ள சூழலையும் சுத்தம் செய்ய அன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இனி எரிபொருள் கப்பல் வராது என்பது போலியான செய்தியாம்

## எரிபொருள் அமைச்சர் காஞ்சன கூறுகிறார்

இலங்கைக்கு எரிபொருளுடன் வியாழக்கிழமை வருகை தந்துள்ள கப்பல் இறுதிக் கப்பலாகும் என்றும், இதன் பின்னர் எரிபொருள் கப்பல் வராது என்றும் வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும். வியாழன் நாட்டை வந்தடைந்த கப்பல் இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் வந்த இறுதிக் கப்பலாகும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்த மார்ச் மாதம் முதல் இன்று வரை (வியாழன் வரை) வருகை தந்த சகல எரிபொருள் கப்பல்களும் இந்திய கடன் திட்டத்தின் கீழ் வந்தவையாகும். முதற்கட்டமாக 50 கோடி டொலரும் பின்னர் இரண்டாம் கட்டமாக 20 கோடி டொலர் கடன் திட்டம் எரிபொருள் இறக்குமதிக்காக வழங்கப்பட்டது. அதற்கமைய வியாழன் வருகை தந்த கப்பலில் காணப்பட்ட எரிபொருளுடன் கையிருப்பில் உள்ள எரிபொருள் தொகையைக் கொண்டு எதிர்வரும் 21 ஆம் திகதி வரை முகாமைத்துவம் செய்ய முடியும். தற்போது எமக்குக் கடனுக்கு எரிபொருளை வழங்குவதற்கு ஏனைய நாடுகள் தயக்கம் காண்பிக்கின்றன. ரஷ்ய தூதுவர் இந்த விடயத்தில் தலையிட்டு உதவ முற்படுவ தாகத் தெரிவித்துள்ளார். பெற்றோல் மற்றும் டீசலை இறக்குமதி செய்வதற்கு இரு நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அவற்றுக்கான கடன் கடிதம் மத்திய வங்கியால் விடுக்கப்பட்டால் அடுத்து எரிபொருள் கப்பல் வருகை தரும் தினத்தைக் குறிப்பிட முடியும். எதிர்வரும் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் மசகு எண்ணெய் கப்பல் நாட்டுக்கு வருகை தரவுள்ளது. எவ்வாறிருப்பினும் போதுமானளவு மசகு எண்ணெய் கிடைக்கப் பெறும் வரை மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே சுத்திகரிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். நாட்டுக்கு வருகை தரும் ஒரு கப்பலில் 10 நாள்களுக்கு தேவையான எரிபொருளே காணப்படும். ஆனால் தற்போது சிலர் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக ஒரு மாதத்துக்குத் தேவையான எரிபொருளைப் பதுக்கி வைக்கின்றனர். இவ்வாறான பதுக்கல் நடவடிக் கைகள் குறைவடையும் வரை எரிபொருள் வரிசைகளைக் குறைக்க முடியாது.

# இலங்கைக்கு 60 லட்சம் டொலர் வழங்கவுள்ளதாம் அமெரிக்கா

## அந்நாட்டு தூதுவர் ஜூலி சங் உத்தரவாதம்

பொருளாதார நெருக்கடியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்காக 60 லட்சம் டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்கவிருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த நிதியுதவி சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டல்களுக்கு அமைவாக பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான பொருளாதார மற்றும் நிதி மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப உதவிகளை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்குவதற்கு உதவும் என்று இலங்கையிலுள்ள அமெரிக்கத்தூதரகம் தெரிவித்துள்ளது. தற்போது பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கை மக்களுக்கு உதவுவதற்கான அர்ப்பணிப்பான கடப்பாட்டை அமெரிக்கா கொண்டிருக்கின்றது. இலங்கையின் நீண்டகால அபிவிருத்திப் பங்காளி என்ற ரீதியில் இலங்கையில் நிலையான அபிவிருத்தி மற்றும் சிறந்த அரசநிர்வாகம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான அனைத்துவித முயற்சிகளையும் அமெரிக்கா மேற்கொள்ளும் என்று அந்நாட்டுத் தூதுவர் ஜூலி சங் உறுதியளித்துள்ளார்.

இந்த நிதியுதவியின் ஒரு பகுதி சிறியளவிலான விவசாய நடவடிக்கைகள், தொடர்ந்து உயர்வான வறுமைக்கு முகங்கொடுத்திருக்கும் சிறிய வணிகமுயற்சிகள் மற்றும் தற்போதைய நெருக்கடியால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள தரப்புக்கள் ஆகியவற்றுக்கு உதவும் நோக்கில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக ஒன்றிணைவு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்திட்டத்துக்கு வழங்கப்படவுள்ளது. அத்தோடு அரசதுறை வினைத்திறனான முறையில் செயற்படுவதற்கும், வர்த்தகம், தேசிய செலவினங்கள் மற்றும் வருமானம் ஆகியவற்றை உரியவாறு நிர்வகிப்பதற்கான வளங்களை சீரமைத்தல் ஆகியவற்றுக்கும் இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** என்ன? இரண்டாவது 'விக்கற்றும்' போயிட்டுது போல!

**பதில்:-** நீங்கள் எந்த 'விக்கற்றைச்' சொல்லுகிறீர்கள் என்று புரிகிறது. அடுத்தடுத்து இரண்டு 'விக்கற்று'களும் போனது போல மூன்றாவது 'விக்கற்றும்' விரைவில் போகும் என்று 'போலர்கள்' சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் கடைசியாய் நிற்கும் 'பிளேயர்' தோல்வியடைந்தவராய் 'கிறவுண்டை' விட்டு வெளியேற மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்து நின்று பார்க்கிறார். தன் துணைக்காக 'எக்ஸ்ட்ரா பிளேயரைக்' கூட்டிக்கொண்டு வந்து விளையாடத் தொடங்கியிருக்கிறார். வந்த 'எக்ஸ்ட்ரா பிளேயர்' பாவம்! அவர் நல்ல 'கிறவுண்டுகள்'பல கிடைத்தும், விளையாடிய ஒரு 'கேமிலும்' முழுமையாய் நின்று பிடிக்காத ராசியுள்ளவர். ராசியில்லாத இரண்டு பேருடைய விளையாட்டும் எங்கு போய் முடியப் போகிறதோ என்று மக்கள் எல்லோரும் பயத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ அந்த 'எக்ஸ்ட்ரா பிளேயர்' பலதரம் 'டக்கவுட்' வேறு ஆனவருங்கோவ்**

**2. கேள்வி:-** சில கட்சிகளைச் சேர்ந்த தமிழ்நாட்டு அரசியல்வாதிகள், சிதம்பரம் நடராஜரை இழிவு செய்தமை பற்றி ஒன்றுமே பேசாமல் இருந்துவிட்டு இப்போது, நபிகள் நாயகத்தை இழிவு செய்தமை பற்றிக் கொதித்து எழுகிறார்களே. பார்த்தீர்களா?

**பதில்:-** பார்த்தேன்! பார்த்தேன்! பார்த்தேன்! யாராயிருந்தாலும் குறித்ததொரு மக்கள் குழுவினரின் இறைநம்பிக்கையை இழிவு செய்வது மிகப்பெரிய குற்றமேயாம். இதுபற்றிப் போன வாரமும் சொல்லியிருக்கிறேன். நீங்கள் சொல்லும் அரசியல்வாதிகள் எந்தச் சமயத்தின் மீதும் நம்பிக்கை இல்லாதவர்கள். அவர்கள் ஒன்றும் நபிகளின் மீதான அக்கறையால் கொதிப்பதாக நினைந்து விடாதீர்கள். அவர்களுக்கு 'பாரதீய ஜனதாக் கட்சிக்கு' எறிய ஒரு கல் தேவைப்பட்டது. அதை பாரதீய ஜனதாக் கட்சியின் செய்தித் தொடர்பாளர்களே வலியத் தூக்கிக் கொடுத்துவிட்டார்கள். கிடைத்த கல்லை அவர்கள் சும்மாவா விடப்போகிறார்கள்? இஸ்லாமிய மதத்தின் மேல் எந்தப் பற்றும் இல்லாத இவர்கள் தமது அரசியலுக்காகப் பொய்மையாய்க் கொதித்துக் காட்டுகிறார்கள். அவ்வளவுதான்.

சிதம்பரம் நடராஜரை இழிவு செய்தவருக்கு எதிராக கோபப்பட்டு இவர்களுக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை. அதனால் அந்தப் பிரச்சினையை 'அம்போ' என்று விட்டுவிட்டார்கள்.

இவர்களைப் பற்றி என்னத்தைச் சொல்லச் சொல்கிறீர்கள்? தனது சேலை உரியப்பட்டதைப் பற்றிக் கவலையேபடாமல், ஊரானின் சேலை உரியப்பட்டதைப் பற்றிக் கூக்குரல் இடும் கோமாளிகள். 'வேடிக்கை மனிதர்கள்'என்று பாரதியார் இவர்களைத்தான் கூறியிருப்பார் போல. யாருக்கும் உண்மையில்லாத இவர்களைப் பற்றிப் பேசி என்ன பயன்? விட்டுத் தள்ளுங்கள்!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமும் இன்றி**
**வஞ்சனை செய்தாரடி கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி'**

**3. கேள்வி:-** கற்பவர்களுக்கு வள்ளுவன் தந்த செய்தி உயர்ந்ததா? கம்பன் தந்த செய்தி உயர்ந்ததா?

**பதில்:-** இரண்டு பேரும் வேறு வேறு செய்திகளைத் தந்ததாய் உங்களுக்கு யார் சொன்னது? இருவர் சொன்னதும் ஒரே செய்தியைத்தான். சொன்ன முறையில் மட்டும்தான் வேறுபட்டிருக்கிறார்கள். ஒருவர் தேனை நேராகத் தந்தார். மற்றவர் அந்தத் தேனை வைத்துத் தேன்குழல் செய்து தந்திருக்கிறார். விடயம் அவ்வளவு தான். ஆழ்ந்து படியுங்கள் உண்மை தெரியும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ அப்ப ஒருத்தரை மட்டும் படிச்சாப் போதுமோ? ஹி..ஹி..**

4. கேள்வி:- இப்போதைய இளைஞர்களின் காதலில் உண்மை இல்லாமல் போய்விட்டதே. பார்த்தீர்களா?

பதில்:- உங்கள் கருத்தை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்! பசிப்பது போல, தாகம் எடுப்பது போல, காதல் என்பதும் ஒருவரில் இயற்கையாய்த் தோன்றும் ஓர் உணர்வு. இயற்கை உணர்வொன்று பொய்யாயிருக்க வாய்ப்பில்லை. ஒருவரை ஒருவர் கண்டதும் 'இவரே என் வாழ்க்கைக்குத் துணை' என நெஞ்சம் ஏங்கத் தொடங்குவதற்குப் பெயர்தான் காதல். அந்த ஏக்கம்தான் காதலாய் மலர்கிறது. அங்ஙனம் மலரும் காதல் எப்போதும் உண்மையானதாய்த்தான் இருக்கும்.

இந்தக் காதலின் வீரியத்தைக் கல்யாணமே ஆகாத நாவுக்கரசரே, 'பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள் அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள், அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என இவ்வளவு உயர்த்திப் பாடியிருக்கிறார் என்றால், காதலின் பெருமையை நாம் சொல்லவா வேண்டும்?

நாவுக்கரசர் சொன்னது அன்றைய காதல். இன்று அது இன்னும் வளர்ந்திருக்கிறது. நினைத்த காதல் நிறைவேறாத பட்சத்தில் அன்னையையும் அத்தனையும் மட்டுமல்லாமல், தம் ஆருயிரையும் இழக்க எத்தனையோ பேர் தயாராகிவிடுகிறார்கள். அப்படியிருக்க இன்றைய காதலில் பொய் கலந்துவிட்டதாய் எப்படிச் சொல்லமுடியும்? இன்றும் காதலில் பொய் கலக்கவில்லை. பொய்யர்கள் சிலர் காதலில் கலந்துவிட்டார்கள் என்பதுதான் உண்மை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ இவர் காதலைப் பற்றி இவ்வளவு சொல்றதைப் பார்த்தால் கொஞ்சம் 'டவுட்டா' இருக்குதுங்கோ. ஹி..ஹி...!**

**5. கேள்வி:-** பெற்றோல் இல்லை, டீசல் இல்லை, காஸ் இல்லை, மண்ணெண்ணை இல்லை, உரம் இல்லை என ஒவ்வொரு நாளும் நம் நாட்டில் 'இல்லைகளின்' பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. மக்கள் வெய்யிலிலும், மழையிலுமாக வீதியில் நின்று படாத பாடு படுகிறார்கள். இந்நிலையில் மக்களைக் காக்க வேண்டிய அமைச்சர்கள், பொருள்கள் இன்றைக்கு வருகின்றன, நாளைக்கு வருகின்றன என்று பொய்யான அறிக்கைகளாய் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். டொலர் இல்லாததால், பொருள்களைக் கொண்டு வந்த கப்பல்கள் நடுக்கடலில் நின்று தத்தளிப்பதாய் ஊடகங்கள் சொல்கின்றன. இந்நாட்டுக்கு என்னதான் முடிவு ஏற்படப் போகிறது?

**பதில்:-** இன்று நாட்டு மக்கள் அனைவரது மனத்திலும் இருக்கும் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். உங்கள் கேள்வியின் நீளத்தில் மக்கள் மனதில் இருக்கும் துன்பத்தின் நீளம் தெரிகிறது. கப்பல்கள் மட்டுமா நடுக்கடலில் தத்தளிக்கின்றன? இதுநாள் வரை இந்து சமுத்திரத்தின் முத்தாய் ஒளிவீசிய இலங்கையும் கூடத்தான் நடுக்கடலின் நடுவில் தத்தளித்து நிற்கின்றது.

இத்தனை அவலத்திற்கு மத்தியிலும் பதவி ஆசையால் அமைச்சர்களாகிவிட்டு, இன்று ஏதும் செய்ய முடியாத நிலையில் அமைச்சர்கள் 'வெறுங் கையால் முழம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'மக்கள் படும் துன்பத்தைக் காணச் சகிக்கவில்லை. 'இது பொறுப்பதில்லை தம்பி எரிதழல் கொண்டுவா, கதிரை வைத்திழுந்தான் அண்ணன் கையை எரித்திடுவோம்' என்று பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் வீமன் கொதிப்பது போலத்தான் கொதிக்கவேண்டியிருக்கிறது.

இன்று ஏற்பட்டிருக்கும் 'இல்லைகள்' வாழ்க்கையின் இரண்டாம் கட்டத் தேவைகள்தான். அந்த 'இல்லைகள்' இன்னும் விரிந்து, முதல் கட்டத் தேவைகளான உணவு, மருந்து என்பவற்றைத் தொடுகிறபொழுது தான் ஆபத்து இருக்கப் போகிறது. அப்படி ஒரு நிலை வந்தால் மக்களின் கொதிப்பை எந்தப் பொலிஸாலும், இராணுவத்தாலும் கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றும் என்பது நிச்சயம். அதற்கு முன்பாக நம் அமைச்சர்கள் நாட்டு மக்களையும், தம்மையும் காத்துக் கொள்ள வழி செய்யவேண்டும். இல்லாவிட்டால், 'அரோகரா' தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ பஞ்சத்திற்கு எப்போ பஞ்சம் வரப்போகிறதோ? -நம்ம 'கொமெண்ட்' எப்பூபூடி...?**

**6. கேள்வி:-** புதிய பிரதமர் ரணில், தன்னுடைய அனுபவத்தால் தத்தளிக்கும் நாட்டை மீட்டு விடுவார் என்றார்களே! இதுவரை அவர் என்னதான் செய்திருக்கிறார்?

**பதில்:-** அவரும் தான் என்ன செய்வார்? நாட்டின் கஜானாவைக் காலியாக்கிய பின், அவரின் கையில் அதனை ஒப்படைத்திருக்கிறார்கள். பாவம், மனுஷனும் தேடி வந்த பதவியை விட்டுவிட மனமில்லாமல், அதை இறுகப் பற்றிக்கொண்டு, தன்னைக் காப்பாற்றக் கடும் பிரயத்தனம் பண்ணிக்கொண்டிருக்கிறார். இந்நிலையில் அவராவது நாட்டைப் பாதுகாப்பதாவது? நடக்கிற கதையாய்ப் பேசுங்கள். 'இந்த மாதம் வறுமை வரப்போகிறது', 'அடுத்த மாதம் பஞ்சம் வரப்போகிறது', 'அடுத்த வருடம் வரை உருப்பட வழியில்லை' என்பதான அறிக்கைகளை விடுவதையே புதிய பிரதமர் தனது தற்போதைய தொழிலாகக் கொண்டிருக்கிறார். அதுதான் இப்போதைக்கு அவர் செய்துகொண்டிருக்கும் ஒரே காரியம்.

நாளுக்கு நாள் சொச்சமாக மிஞ்சியிருக்கும் 'டொலர்'களின் தொகையும் வற்றிக் கொண்டே போகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் தங்களது கால்களை ஆழமாகப் பதித்துக் கொள்ளலாம் என நினைக்கும் அண்டை நாடுகள் சில, 'அதைத் தருகிறேன்', 'இதைத் தருகிறேன்'என்று ஆசை காட்டிக் கொண்டிருக்கின்றன.

வெளி வரும் அந்த அறிவுப்புகளுக்குப் பின்னால், அரசுக்கு வரக்கூடிய நெருக்கடிகளை அனைவரும் அறிவர். அவை இலங்கைக்கு மறைமுகமாய்த் தரும் நெருக்கடிகளை, அப்பாவியாய்க் 'கோப்' குழுவின் விசாரணையின்போது வெளிப்படுத்திவிட்டு, பாவம்! பதவி இழந்து நிற்கிறார் மின்சார சபைத் தலைவர். உண்மையில் அந்நாடுகள் தரும் உதவிகள் எமக்கான வரவுகள் அல்ல. நம் நாட்டிற்கான விலைகள். அந்த உண்மை தெரிந்தாலும் வேறு வழியில்லாமல் கையேந்திக் கொண்டிருக்கிறது புதிய அரசாங்கம். அக்கையேந்துதலையே தனது சாதனையாய் வேறு சொல்லிக் கொண்டிருக்கிறது அது.

இன்றுவரை ரணில் அரசாங்கம் 'டொலர்'களின் வரவுக்கான புதிய பாதைகள் எதனையும் திறந்ததாய்த் தெரியவில்லை. கடன் வாங்கிக் கடன் அடைக்கும் முயற்சியைச் சாதனையாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது எப்படி சாதனையாகும்? சேற்றுக்குள் கால் வைத்தவன் அதனை எடுக்க நினைத்து அழுத்த அழுத்த மேலும் சேற்றுக்குள் அகப்படுவானாம். கிட்டத்தட்ட ரணில் அரசாங்கமும் அதனைத்தான் செய்து கொண்டிருக்கிறது. பாவம் பல தோல்விகளை ஏற்கனவே சந்தித்த ரணில், மீண்டும் ஒரு தோல்வியைச் சந்திப்பதற்கான ஆயத்தத்தைச் செய்து கொண்டிருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁕ 'பொன்னான வாழ்வே மண்ணாகிப் போமா?'.......**

# அரசின் ஊடகப் பேச்சாளராகவே பிரதமர் ரணில் செயற்படுகின்றார்!

## இராதாகிருஷ்ணன் சாட்டை



21 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு முழுமையாக அது நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர் –

இந்தியாவே இலங்கைக்கு அதிகமான உதவிகளை வழங்கி வருவதால் காற்றாலை திட்டத்தை அதானி குழுமத்துக்கு வழங்குவதில் ஆட்சேபனை தெரிவிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட வேலுசாமி இராதாகிருஷ்ணன் –

அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளராக இருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

நாட்டில் கடுமையான எரிபொருள் நெருக்கடி நிலவும் நிலையில், உலக நாடுகளை கருத்திற்கொள்ளாமல் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை நாட்டில் 50 வீதம் அதிகரிப்பு!



மேல்மாகாணத்தில் 10 வருடங்களின்பின்னர்டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 50 வீதத்தால் அதிகரித்துள்ளது.

சுகாதார சேவைகள் குடும்பி ஆய்வு பிரிவின் உதவி அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நஜித் சுமணசேன இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நுளம்பின் முட்டை ஒரு வருடத்துக்கும் மேலாக வறண்ட சூழலில் இருக்கும் எனவும், குறித்த பகுதியில் தண்ணீர் நிரம்பும் போது நுளம்புகள் 8 முதல் 10 நாள்களுக்குள் உற்பத்தியாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனால், அதிக அளவில் சுற்றுச்சூழலுக்கு விடப்படும் பிளாஸ்டிக் கொள்கலன்கள் மற்றும் போத்தல்கள் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடமாக மாறியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கட்டுமானப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் நுளம்புகள் உற்பத்தியாகும் இடமாக மாறியுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாட்டில் பஞ்சம் வராது அச்சப்படவே வேண்டாம்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவிப்பு



*நாட்டில் தற்போது பரந்தளவிலான விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் பஞ்சம் ஏற்படாது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.*

*நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.*

*ஒருமாதத்திற்கு 500 தொடக்கம் 1, 000 மெற்றிக் தொன் அரிசியே விநியோகிக்கப்படுவதாகவும் அதனை 10 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரிக்க ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*எனவே, தேவைக்கு ஏற்ப சதொச மற்றும் ஏனைய பல்பொருள் அங்காடிகளில் அரிசியை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.*

*தான் அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு முன்னர், 2 லட்சத்து 48 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பே விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*ஆனால் தற்போது 4 லட்சத்து 70 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பு விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*எனவே நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் மக்கள் வீணாக அச்சப்படத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.*

# மாணவியை அடித்துத் துன்புறுத்தியமை; கைதான ஆசிரியைக்கு பிணை வழங்கல்!

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவியை அடித்துத் துன்புறுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆசிரியை மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆசிரியையை எதிர்வரும் 19 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக மன்று உத்தரவிட்டது.

கடந்த 10 ஆம் திகதி மாணவி அடித்துத் துன்புறுத்தப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

சித்தன்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த 7 வயது மாணவியே அடித்து துன்புறுத்தப்பட்டுள்ளார்.

கடுமையான மன அழுத்தத்துக்கு உள்ளாகிய மாணவிக்கு உளநல மருத்துவ வல்லுநரால் உளநல சிகிச்சை வழங்கப்பட்டது.

மாணவியின் குடும்பத்துக்கு பண உதவியை வழங்கி இணக்கமாக முடிக்க பாடசாலை நிர்வாகம் முயற்சித்தது.

இந்த நிலையிலேயே மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் ஆசிரியை வியாழக்கிழமை மாலை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

# மன்னாரில் பதுக்கிவைக்கப்பட்ட எரிபொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டு மக்களுக்கு விநியோகம்!



மன்னார், ஜூன் 18

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி,திருக்கேதீஸ்வரம் சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெற்றோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருள்கள் மன்னார் மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டு வியாழக்கிழமை இரவு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி,திருக்கேதீஸ்வரம் சந்தியில் அமைந்துள்ள லங்கா எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருள்களைக் கையிருப்பில் வைத்துக் கொண்டு மக்களுக்கு வழங்காது பதுக்கிவைத்திருப்பதாக மக்கள் மன்னார் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையிடம் முறைப்பாடு செய்தனர்.

மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக மன்னார் மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் இணைந்து வியாழக்கிழமை இரவு குறித்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன் போது அந்த எரிபொருள் நிலையத்தில் பெற்றோல், டீசல் மற்றும் சுப்பர் பெற்றோல் பதுக்கி வைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போது 2 ஆயிரத்து 47 லீற்றர் பெற்றோல் 3, ஆயிரத்து 153 லீற்றர் டீசல் மற்றும் 3 ஆயிரத்து 196 லீற்றர் சுப்பர் பெற்றோல் ஆகியவை பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் மேற்படி எரிபொருள்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் உடனடியாக மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பெற்றோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருள்களை பதுக்கி வைத்தமை தொடர்பாக மன்னார் மாவட்ட பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ‘அம்மா ஏன் இவ்வாறு செயற்பட்டார் என்று தெரியவில்லை’ தாயாரால் களனி ஆற்றில் வீசப்பட்ட சிறுவனின் அண்ணன்!

வத்தளை கதிரான பாலத்துக்கு அருகில் தாயொருவரால் களனி ஆற்றில் வீசப்பட்ட ஐந்து வயது சிறுவனைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார், கடற்படையினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து இந்தத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ள பெண்ணின் – தாயின் – மூத்த மகன், தனது அம்மா வுக்கு வலிப்பு நோய் உள்ளதாகவும் அம்மா தன்னைவிட தம்பிமீதுதான் அதிகமாகப் பாசம் காட்டுவார் என்றும் தெரிவித்துள்ளார்.

அப்படியிருக்கையில் ஏன் இவ்வாறு செய்தார் என்று தெரியவில்லை என்றும் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை 5.20 மணியளவில் வீட்டில் இருந்து தம்பியை மட்டும் அழைத்துக்கொண்டு அம்மா வெளியேறினார் எனவும் இதன்போது, எங்கே போகிறீர்கள் எனக் கேட்டதற்கு அவரேதும் பதிலளிக்காமல் சென்றுவிட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

மாற்றுத் திறனாளியான சிறுவனின் தாய் கடந்த புதன்கிழமை இரவு சிறுவனை களனி ஆற்றில் எறிந்துவிட்டு தானும் ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயன்றபோது, அப்பகுதி மக்கள் அவரைக் காப்பாற்றியுள்ளனர்.

எனினும் சிறுவனைக் காப்பாற்ற முடியவில்லை. குறித்த தாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கைத்தொழில் துறைக்கு புதிய உத்திகளை வகுத்தால் நாட்டுக்கு அந்நிய சொலாவணியை விரைவாக ஈட்டலாம்!

## ஜனாதிபதி கோட்டா புதிய திட்டம்



அந்நியச் செலாவணியை விரைவாக ஈட்டுவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கைத்தொழில் துறையில் வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

நீண்டகாலமாக இருக்கின்ற விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் முதலீட்டிற்கு கடுமையான தடையாக உள்ளன. முதலீட்டை ஊக்குவிப்பதற்காக புதிய உத்திகளைக் கையாண்டு கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு பாரியளவு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

கைத்தொழில் அமைச்சின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்காக கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய கைத்தொழில்களை இனங்கண்டு அவற்றின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய எதிர்கால நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அந்நியச் செலாவணி நெருக்கடியால் கைத்தொழில் துறையினர் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. ஏற்றுமதி கைத்தொழில் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணியை நேரடியாக மூலப்பொருள்கள் இறக்குமதிக்குப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் ஆராயுமாறு ஜனாதிபதி அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

உள்நாட்டுக் கைத்தொழில்களுக்காகப் புதிய கொள்கை ஒன்று வகுக்கப்படும் என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார். அதன் பிரதான பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன எனவும், மிக விரைவில் அதனை சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறேன் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இரத்தினக்கல் கைத்தொழில் துறையின் மூலம் பெறக்கூடிய அந்நியச் செலாவணியின் அளவு மிக அதிகமாக இருந்தாலும், தற்போதுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் காரணமாக இலங்கைக்கு இரத்தினக்கற்களுக்கு உரிய இலாபம் கிடைப்பதில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புதிய கைத்தொழில்களை உருவாக்கும்போதும் ஏற்கனவே உள்ள கைத்தொழில்களை தொடர்ந்து நடத்திச் செல்லும்போதும் பல்வேறு அரச நிறுவனங்களின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் அவற்றை பலமிழக்கச் செய்கின்றன என கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜெனரல் தயா ரத் நாயக்க தெரிவித்தார். இதனால் பல வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாடு இழந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கைத்தொழிற்துறைக்கு அனுமதி வழங்கும் அனைத்து நிறுவனங்களும் ஒரே மேசையில் ஒன்றிணைந்து தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்காவிட்டால் முதலீட்டாளர்களை வெற்றிகொள்ள முடியாது என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். நாட்டின் பொருளாதாரம் வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. அதனை உற்பத்திப் பொருளாதாரமாக மாற்றுவது காலத்தின் தேவை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அநுர திஸாநாயக்க மற்றும் கைத்தொழில் அமைச்சுக்கு உட்பட்ட துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பொருளாதார நெருக்கடியால் அரசியல் கைதிகளும் பாதிப்பு!

பொருளாதார நெருக்கடி காரணமாக அரசியல்கைதிகளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என அரசியல்கைதியொருவர் தெரிவித்தார்.

வழக்கொன்றுக்காக நேற்று (வெள்ளிக்கிழமை) வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு மூன்று அரசியல் கைதிகள் ஆயுதம் தாங்கிய பொலிஸார் சகிதம் பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் வழக்கு நிறைவின் பின்னர் அவர்களை மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்து செல்லும் பொருட்டு வாகனத்தில் ஏற்றிக்கொண்டும் செல்லும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

பொருளாதார நெருக்கடியால் அரசியல் கைதிகளும் பல்வேறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றமையால் தமிழ் மக்கள் அனைவரும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகக் குரல் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# 21 இற்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாடு கூட்டமைப்பின் ஒரு சாராருக்கு உண்டு!

## பங்காளிக் கட்சி எம்.பி. ஜனா சாடல்

கொழும்பு, ஜூன் 18

21 ஆவது திருத்த சட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கவேண்டுமானால் 13 ஆவது திருத்த சட்டத்துக்குள் இருக்கும் அதிகாரங்களை முழுமையாக பரவலாக்கவேண்டும் என்ற திருத்தம் 21 ஆவது திருத்த சட்டத்துக்குள் உள்வாங்கப்படவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள சிலரும் 21 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் செயற்படுவதுடன் அந்த சட்டத் திருத்தத்தின் குழுவில் தாங்களும் உள்ளோம் எனப் பெருமையாகச் சொல்லிவருவருகின்றனர்.

மாகாணத்துக்குக் காணி, நிதி அதிகாரங்கள் வழங்காமல் எந்த திருத்த சட்டமூலத்தையும் கொண்டுவருவதால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

என்னைப்பொறுத்த வரையில் 21 ஆவது திருத்தச் சட்டம் வரும் என்பதில் எந்த நம்பிக்கையும் இல்லை. இந்தத் திருத்த சட்டங்கள் மூலம் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு என்ன இலாபம் இருக்கின்றது என்பதை நாங்கள் முதலில் சிந்திக்கவேண்டும்.

இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட எட்டு திருத்தச் சட்டங்களுக்கு முன்னர் வந்த 13 ஆவது திருத்தச் சட்டம் கூட இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. 13 ஆவது திருத்தத்துக்குள் இருக்கின்ற காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் நிறைவேற்றப்படாத நிலையில் உள்ளன. இந்த அரசாங்கம் அரசமைப்பை மீறுகின்றது.

இந்த 21 ஆவது திருத்த சட்டத்தின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தை ஒழித்து அந்த அதிகாரங்களை நாடாளுமன்றத்துக்கு வழங்கி அதன்மூலம் நாடாளுமன்ற ஜனநாயக முறையைக் கொண்டுவரவேண்டும். – எனத் தெரிவித்தார்.

# சர்வதேச வீட்டு தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஹற்றனில் ஆர்ப்பாட்டங்கள்!





ஹற்றன், ஜூன் 18

சர்வதேச வீட்டுத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஹற்றனில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்ட பேரணி முன்னெடுக்கப்பட்டது.

புரொடெக்ட் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்ட பேரணி ஹற்றன் மல்லியப்பு சந்தியில் ஆரம்பமானது.

300 இற்கும்மேற்பட்டோர் இதில்பங்கேற்றிருந்தனர். பின்னர் ஹற்றன் தொழில் திணைக்களத்துக்கு பேரணியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு தொழில் ஆணையாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

வீட்டுப்பணியும் ஒரு தொழில் தான். எனவே வீட்டுப் பணியாளரையும் தொழிலாளியாகக் கருது என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டதோடு, பதாதைகளும் ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வீட்டு உரிமையாளர்களின் தொழில் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம், நம்பிக்கை நிதியம் உள்ளிட்டவற்றை வழங்குவதற்கான விசேட சட்டம் இயற்றப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

அதேவேளை, நாட்டில் பொருள்களின் விலைகள் தொடச்சியாக அதிகரிக்கப்பட்டு வருகின்றமையால் தொழிலாளர்களுக்குரிய வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றது.

எனவே மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். வரிசை யுகத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும் எனவும் போராட்டத்தின் போது வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.06.2022இல் வெளியிடப்பெற்றது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -37**

13ஆவது திருத்தத்தை ஸ்ரீலங்கா நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டின்



நரேந்திர மோடி

ஸ்திரத்தன்மையும் ஒற்றுமையும் முன்னேற்றமும் அந்தத் தூணிலேயே தங்கியிருக்கின்றது. அப்படி இல்லாவிடில் அந்த நாடு ஸ்திரத்தன்மையோடு இருப்பதற்கு வழி இல்லை என்பதை உறுதிப்படுத்துவது போல 13ஆவது திருத்தத்தை சர்வதேச மனித உரிமைகள் மன்றின் தீர்மானத்தில் இணைத்து, இரு நாட்டு ஒப்பந்தங்களுக்கு மேல் அதை – அந்த விடயத்தை – ஒரு சர்வதேச ஆவணமாகவும் ஆக்கியுள்ளது சர்வதேச சமூகம்.

ஒன்றை நிதர்சனத்தில் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய புவியியல் சர்வதேச சூழ்நிலைகளில் சிங்களப் பெரும்பான்மையைப் பகைத்து, அவர்களை உலுப்பி, ஆட்டிப்படைத்து, அதிகாரம் செலுத்தி, இந்தியக் கடற் பிரதேசத்திலும், தனது எல்லைகளிலும் உள்ள சிறிய நாடுகளின் உறவுகளைப் பாதிக்கச் செய்ய இந்தியா விரும்பவில்லை.

நேரு காலத்தில் இருந்து இந்திரா காந்தி வரை, பின் ராஜீவ் காலத்தில் கூட, இந்தியா தன்னைப் பேரரசாகக் கருதி, அதனைச் சுற்றியுள்ள சிறிய நாடுகள் தங்களது மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வார்கள் – ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற –எண்ணப் பாங்கில்தான் நடந்தது. இந்த நாடுகள் எல்லாம் அந்த மனோபாவத்தில் தங்களுக்குள்ளேயே பம்மிக் கொண்டு இருக்கின்றன என இந்திய அறிந்து கொண்டும், ஸ்ரீலங்காவை நடத்திய விதத்தில் இந்த நாடுகள் கிழக்குப் பாகிஸ்தான் போல பாடம் படிப்பார்கள் என்று எண்ணி தொடர்ந்து கருமமாற்றியது.

ஆனால் அவர்களை எதிர்த்த விடுதலைப்புலிகளின் போராட்டமும், ஸ்ரீலங்கா அரசின் ராஜ தந்திரங்களும், அண்டைய நாடுகளின் பொருமல்களும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்கள் விழிப்படைய வைத்தன.

மோடி பதவி ஏற்றதும் அவரது கொள்கை விஞ்ஞாபனங்களுக்கு ஏற்ப இவற்றை மாற்றி அமைத்தார். அனுபவசாலியான ராஜதந்திரி ஜெய்சங்கரை வெளிநாட்டு அமைச்சராக நியமித்து, வெளிநாட்டு உறவுகளை ஒரு நட்புறவு பாதையில், இந்தியாவை மையப்படுத்தி நடத்திக் கொண்டிருக்கிறார். அயல் நாடுகளுடனான உறவுகளைச் சீர்கெடவைக்க இந்தியா விரும்பவில்லை. தமிழ் மக்களையும் ஸ்ரீலங்காவின் ஓர் அங்கமாக – சிங்கள மக்களோடு சேர்த்து ஒரு நாட்டின் மக்களாகத்தான் – இந்தியா பார்க்கிறது. பேரினவாதத்தின் விளைவுகளையும், அதன் தாக்கங்களையும், அவை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் சீரழிவுகளையும் ஜெய்சங்கர் போன்றோர் அறியாதவர்கள் அல்லர். அவரது அணுகு முறை வாழைப் பழத்தில் ஊசியேற்றுவது போல, தானே, தண்டங்களைத் தவிர்த்து, முரண்பாடுகளினால் சிங்கள் பேரினவாதம் எவ்வளவுக்குத்தான் தங்கள் ஸ்திரத்தன்மையை இழக்காது போகும் என்று கணக்கெடுப்பிலேயே நகர்கின்றது.


எனினும் பெரும்பான்மை இனத்தின் தலைவர்களை, மஹிந்தவுக்குப் பின்னராவது இந்தியா புரிந்து உள்ளதா என்பதும், இதில் தாங்கள் காவு கொள்ளப்படுகிறார்கள் அல்லது பலிக்கடாவாகின்றார்களா போன்றவையும்தான் தமிழ் மக்களின் – முக்கிய புலம்பெயரின் சில பகுதிகளின் – ஆதங்கமாக உள்ளது.

இந்த ஆதங்கங்களுக்கு அணிசேர்க்கும் வகையில் சில சம்பவங்கள் நடந்து வருகின்றன. இவற்றிலிருந்து அனுபவங்களின் அடிப்படையில் படிப்பினைகளைப் பெற்று அணுகுமுறைகளை வகுப்பதா, அன்றில் இயலாத்தனங்களில் இந்தப் பழங்கள் எல்லாம் புளிக்கும் என்று காறித்துப்பிக் கொண்டு போவதாக என்பதும் புரியப்பட வேண்டும்.

பொது நிறுவனங்களை ஆராயும் நாடாளுமன்றக் குழுவான 'கோப்' கலாநிதி சரித்த ஹேரத்தைத் தலைவராகக் கொண்டு இயங்குகிறது. அனல் மின் நிலையங்கள் அமைக்கும் திட்டங்கள் கையளிக்கப்பட்ட விவகாரங்கள் பற்றி தற்சமயம் இலங்கை மின்சார சபையின் தலைவராக இருந்த பேர்டினாண்டோ, முதலில் தான் அந்தக் குழுவுக்கு 10 ஜூன் 2002 இல் கொடுத்த சாட்சியத்தை வாபஸ் பெறுகிறார் எனவும், அப்படியான சாட்சியம் தந்தமைக்காகத் தான் எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாத மன்னிப்பைக் கோருகிறார் எனவும் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து தற்போது இலங்கை மின்சார சபையின் தலைவர் பதவியிலிருந்து விலகுகிறார் எனவும் அறிவித்துள்ளார். அவரின் சாட்சியத்திலும் மன்னிப்புக் கோரலிலும் பதவியிலிருந்து விலகியமையிலும் மோடியின் பெயர் பெரும் பங்கு வகிக்கிறது.

பேர்டினாண்டோ அனல் மின்சார உற்பத்தி நிலையங்கள் பற்றி 25 நவம்பர் 2021 இல் 'கோப்'பிற்கு கடிதம் மூலம் சில தகவல்களை பரிமாறி இருந்தார். அந்தக் கடிதங்களின் பின்னணிகளைத் தனது சாட்சியத்தில் விளக்கும்போது, அது இந்தியப் பிரதமர் மோடியினால் தரப்பட்ட அழுத்தங்கள், பலவந்தங்கள், ஆக்கினைகளினாலும்தான் இந்தியாவின் அதானி குழுமத்துக்கு இத்திட்டங்கள் கையளிக்கப்பட்டன எனத் தெரிவித்தார். இந்திய அரசின் – மோடியின் – அழுத்தங்களால் ஜனாதிபதி கோட்டாபயவும் அதனை அதானி குழுமத்திற்கு தருமாறு ஜாடைகளில் உணர்த்தினார் என மேலும் கூறினார். இந்த சாட்சியங்கள் வெளி வந்ததும் ஜனாதிபதி கோட்டாபய, தான் அப்படியான பணிப்புரையை எவருக்கும் தரவில்லை என்றும், எந்த நிறுவனத்திற்கு இவை கொடுக்கப்பட வேண்டும் எனக் கருத்துக்களைக் கூறவில்லை என்றும் மறுத்தார். நாட்டுக்கு மின்சாரம் அவசரமாக தேவை, அதற்காக இவற்றைக் கெதிப்படுத்த வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டேனேயொழிய, அவை நாட்டில் இருக்கும் நடைமுறைகளுக்கும் வழிமுறைகளும் அமைவாக நடத்தப்பட வேண்டும் எனத்தான் அறிவித்தேன் என்று ஊடக அறிக்கைகளும் தந்தார். இந்த சர்ச்சைகள் தொடர்கின்றன. ஆனால் பேர்டிணாண்டோ மன்னிப்புக் கோரலுடன் பதவியையும் விட்டு விலகி விட்டார். மோடி தனது அரசியல் ஆதரவாளர்களான நாட்டின் பெரிய முதலாளிகளுக்காக – முக்கியமாக அதானி குழுமத்திற்காக – சர்வதேசரீதியில் பரிந்துரைப் பவர் என்ற குற்றச்சாட்டுகள் இந்திய ஊடகங்களிலேயே பரவலாக உண்டு.

யாழ்ப்பாணத்தை அடுத்த மூன்று தீவுகளிலும், மன்னார் பகுதியிலும் சூரிய மின்சார உற்பத்தி அனுமதிகள் கொடுக்க



பேர்டிணாண்டோ

இருந்தமை பற்றி பல செய்திகள் வந்தன. தமிழ் மக்களது தலைவர்கள் எல்லாம் அந்த வளங்கள் தமிழ் மக்களுடையவை (கடலில் மீன் வளங்கள் போல), ஆனால் அவர்களின் அனுசரணை இல்லாமல் வெளியாருக்கு – முக்கியமாக சீனாவுக்கு – கொடுக்கப்படக் கூடாது என எதிர்ப்புகள் தெரிவித்திருந்தாலும், இந்தியா தாங்கள் அவற்றை உதவிகளாகச் செய்து தருகிறோம் எனக் கேட்டும், எதுவிதகேள்விப் பத்திரங்களுமின்றி அவை சீனாவுக்கு கையளிக்கப்பட்டு விட்டன என்ற தகவல்கள் வந்தன. ஆயின் வெளிவரும் சாட்சியங்கள் வேறு ஆளுமைகளை வியாபார ரீதியில் தெரிவிக்கின்றன. இந்தக் கைமாற்றங்களில் தமிழ் மக்களின் வகிபாகங்கள் வெறும் பார்வையாளர்களாக இருந்ததுதான். தமிழ் மக்களின் உரித்தான வளங்களைப் பாதுகாப்பது, உற்பத்தி செய்வது, சந்தைப்படுத்துவது போன்ற எதிலும் இந்திய அரசுடன் தொடர்புபட்டு, பேச்சுக்களில் ஈடுபடத் தகைமையுள்ள கட்டமைப்புகள் நம் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆயினும் புலம்பெயரில் இருக்கும் தமிழ்மக்களின் பணத்தில் ஸ்ரீலங்காவின் கடன்களை மீட்போம் என மின்னஞ்சல்கள் தருகிறார்கள். யதார்த்தமாக ஏற்படுத்தப்பட வேண்டியவற்றுக்கும் புற்றீசல்கள் போன்ற மின்னஞ்சல்களுக்கும் உள்ள வித்தியாசங்கள் இவையே. இந்த நிதிகளைக் கொண்டிருப்போர் அதானி போன்ற குழுமங்களுடன் இணைந்து வியாபார ரீதியில் முதலீடு செய்யக்கூடிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது கிடையாது. இவற்றுக்குத் தேவையானவை எல்லாம் பில்லியன் டொலர்கள் அல்ல. 25 கோடி, 50 கோடி டொலர்கள் தான்.

ஆனால் வசதிகளுக்காகவும் பெயருக்காகவும் தமிழ் மக்களின் புலம்பெயர் முதலாளிகள் பல கோடிகளைக் கொட்டி ரஜினிகாந்த், விஜய் போன்ற முன்னணி நடிகர்களை வைத்து பொலிவுட் படங்கள் தயாரித்து சம்பாதிக்கிறார்கள். தமிழ் மக்களின் தேசியப் பற்று இப்படி உறங்கும் போது, குத்துவிளக்கேற்றி, அவர்களின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க நம்பகமான கட்டமைப்புக்கள் உருவாக்கப்படுவது அவசியமாகின்றது.

(வளரும்)